இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 46 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 07ஆம் திகதி வியாழக்கிழமை
(24.08.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 07, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

BEAT the HEAT The Reliable Fan
1st August to 31st August 2023
DISCOUNT 15% (On selected models only) Cash or Card
*Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

## 4 துறைகள் ஊடாக உறவுகள் மேம்பாடு

### இந்திய - இலங்கை நட்புறவு குறித்து இந்திய உயர்ஸ்தானிகர் அறிவிப்பு



உணவுப் பாதுகாப்பு, வலுசக்தி பாதுகாப்பு, நிதியுதவி மற்றும் நீண்டகால முதலீடுகள் ஆகிய நான்கு துறைகள் ஊடாக இந்திய - இலங்கை உறவுகளை வலுப்படுத்த எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று(23) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (23) பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இந்திய - இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் கூட்டத்தில் உரையாற்றும் போதே உயர்ஸ்தானிகர் இவ்வாறு தெரிவித்தார்.

02 பக்கம்

# சந்திரயான்-3 நிலவில் தரையிறக்கம்



## வரலாற்றுச் சாதனை படைத்தது பாரதம்

07பக்கம்

## தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிமைகள் கோரி அட்டனில் கையெழுத்து போராட்டம்

எஸ்.கணேசன்



தோட்டத் தொழிலாளர்கள் உட்பட மலையக பெருந்தோட்ட மக்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்து திரட்டும் நடவடிக்கை அட்டனில்...

02 பக்கம்

## போலிச் சான்றிதழ் வழங்கிய கிராமசேவகர் கண்டியில் கைது

போலி கிராம உத்தியோகபூர்வ சான்றிதழ்களை வழங்கி 29 பிள்ளைகளை கண்டி புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரிக்கு அனுமதிப்பதற்கு ஆதரவளித்ததாகக் கூறப்படும் கிராம சேவகர் ஒருவரை கண்டி விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் ஹேமந்த பிரேமதிலக கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி செய்த முறைப்பாட்டுக்கமைய, சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி..

02 பக்கம்



ஜனாதிபதி ரணில் அமைக்கவுள்ள புதிய அரசியல் கூட்டணியில் முஸ்லிம் அரசியல் கட்சியொன்று விரைவில் இணையவுள்ளதாக தகவல்.

இதற்கான பேச்சு மேல் மட்டத்தில் நடந்து முடிந்துள்ளது. பல கோரிக்கைகளை முன்வைத்தே அந்தக் கட்சி இணையவுள்ளது.

உஷ்

## கணவர் துன்புறுத்தலெனக் கூறி லிந்துலை யுவதி தற்கொலை

### 09 மாத குழந்தையை காணோம்

வாவியொன்றில் மிதந்து கொண்டிருந்த யுவதியொருவரின் சடலம் நேற்று (23)மீட்கப்பட்டதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவருடன் இருந்த குழந்தை தொடர்பில் தேடல்கள் நடத்தப்படுகின்றன.

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லோகி தோட்டத்தைச் சேர்ந்த மகாமணி மோகனவதி (26 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனது கணவர் மற்றும் கணவரின் குடும்பத்தார் தனக்கும் தனது குழந்தைக்கும் தொல்லை கொடுத்ததாக...

02 பக்கம்

## மேலும் சில பிளாஸ்ரிக் பொருட்களுக்குத் தடை



நாட்டில், ஒக்டோபர் முதலாம் திகதிமுதல் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய 09 பிளாஸ்ரிக் பொருட்களின் உற்பத்தி அல்லது விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிவித்துள்ளது.

02 பக்கம்

## பாராளுமன்றத்தில் அமளிதுமளி: எம்.பிக்கள் இருவர் வெளியேற்றம்

பிரதி சபாநாயகரின் கதிரைக்கு அருகில் வந்து அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா பண்டார ஆகியோரை சபையில் இருந்து வெளியேறுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று அறிவித்தார். அதன்படி, இரண்டு எம்.பி.க்களும் அவையில் இருந்து வெளியேறினர்.

பாராளுமன்ற அமர்வு நேற்று (23) மு.ப. 09.30 மணிக்கு ஆரம்பமாகியிருந்ததுடன், மு.ப. 09.30 மணிமுதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விக்கான நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதன்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஆளுந்தரப்பினரிடம் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், அதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட ஆரம்பித்திருந்தனர்.

02 பக்கம்

## அநீதியாக உயர்த்தப்பட்ட சட்டக்கல்லூரி கட்டணம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பாராளுமன்றத்தில் மீண்டும் குரல்



வர்த்தமானி இலக்கம் 2313/49 மூலம் சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை கட்டணம் பெருமளவு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த அதிகரிப்பானது, 257 சதவீத அதிகரிப்பாகும் என்றும் இது தொடர்பில் நீதியமைச்சரின் கவனத்துக்கு முன்னரும் கொண்டு வந்ததாகவும் இது குறித்து தமக்கு...

02 பக்கம்

## தலதா பெரஹெராவில் யானைகள் அட்டகாசம்

### ஏரியில் குதித்த பொதுமக்கள்



கண்டி தலதா மாளிகையின் பெரஹெராவின்போது வீதி உலா சென்ற இரண்டு யானைகள் அட்டகாசம் செய்ததால் பெரஹெராவை பார்த்துக் கொண்டிருந்த மக்கள் மத்தியில் நேற்றுமுன்தினம்...

02 பக்கம்

கமெண்ட் கந்தர்...



பெரஹெரா யானை குழப்பமாம்... குருந்தூர்மலையில நடக்கிற அநியாயங்களை கண்டுதான் ஆனைமுகத்தான் கண்டியில குழம்பிட்டார் போல..

ரூ.10,000,000,000/-
2022 ஆம் ஆண்டின் SLIC ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும்,
வரலாற்றின் மாபெரும் sure போனஸ் தொகையின் பெறுமதி
ரூ.10 பில்லியன் தாண்டியுள்ளது!
011 2 357 357
www.srilankainsurance.com
SLIC ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ்
Company Registration Number PB 289



# புத்தளம் - தப்போவ சரணாலயத்தில் தீ

புத்தளம் - தப்போவ சரணாலயத்தில் தீப்பரவல் இடம்பெற்றுள்ளதாக கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த தீப்பரவலானது தப்போவ 10ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் (22) இடம்பெற்றுள்ளது.

இந்த தீப்பரவலில் சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளதாக கூறப்படுகிறது.

காட்டுத்தீ பரவியுள்ளதாக அப்பகுதி மக்கள் கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு தகவல் வழங்கியதையடுத்து அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து பாரிய சிரமத்துக்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

எனினும், தீப்பரவலுக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என தெரியவருகிறது. சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தரப் பரீட்சை பெறுபேறு செப்டெம்பர் 10க்கு முன்னர்

உயர்தரப் பரீட்சையின் (2022) பெறுபேறுகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படுமென கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பெபேறுகள் வெளியானதும் வெட்டுப்புள்ளிகளுக்கமைய மாணவர் களை பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் விரைவாக ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

# அரச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க நடவடிக்கை

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்



நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஏற்கனவே 8ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு, மேலும் 5ஆயிரத்து 500 பட்டதாரி ஆசிரியர்களும் 2ஆயிரத்து 500 இரண்டாம் மொழி ஆசிரியர்களையும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் கல்வியமைச்சர் என்ற வகையில் கல்வித் துறையின் முன்னேற்றம் குறித்து விசேட கவனம் செலுத்தி வருவதாகவும், கல்வித்துறையில் பல்வேறு மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்வதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நவீன உலகுக்கு முகங்கொடுக்கக் கூடியவாறு, எமது மாணவர்களை தயார்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், அதற்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலைத்துறை, கணிதவியல் உள்ளிட்ட பாட விடயதானங்களை உள்ளடக்கிய வகையில் "STEAM" என்ற தொனிப்பொருளில் எதிர்காலத்தில் கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை மாணவர்கள் தமது நேரத்தை வீணாகக் கழிப்பதைத் தவிர்க்கும் வகையில், அவர்களுக்கு ஆங்கிலம், தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சிகளுடன் கூடிய பாடநெறிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் இது மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள உதவும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, அண்மையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறிவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போது பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்கவும் மேலும் இரண்டாம் மொழி ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கும் அவசியமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அந்தவகையில், ஏற்கனவே சுமார் 8ஆயிரம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்காலத்தில் மேலும் 5ஆயிரத்து 500 பட்டதாரிகள், ஆசிரியர்களாக இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் மேலும், 2ஆயிரத்து 500 இரண்டாம் மொழி ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், நாடளாவிய ரீதியில் நிலவும் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

# சம்பத்நுவர கமநல நிலையம் முல்லைத்தீவுடன் இணைப்பு; நெல் சந்தைப்படுத்தலுக்கு 50மில்லியன் நிதி ஒதுக்கீடு

## முல்லை கமநல அபிவிருத்தித் திணைக்களம் தகவல்

விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு - வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள சம்பத்நுவர கமநலசேவை நிலையம் இதுவரைகாலமும் அநுராதபுரம் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள நிர்வாகத்தின் கீழ் காணப்பட்டது.

இந் நிலையில், தற்போது குறித்த சம்பத்நுவர கமநலசேவை நிலையம் முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.பரணீகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நெற்கொள்வனவுக்கென 50மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு நெல்சந்தைப்படுத்தல் சபையால் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற கருத்து நிலவுவதால் விவசாயிகள் நெல்லைச் சந்தைப்படுத்த ஆர்வமின்றிக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் 5ஆயிரத்து 376 விவசாயிகளுக்கு 22,876மெற்றிக்தொன் ஜப்பானிய உரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில்,

**சம்பத்நுவர கமநலசேவை நிலையம் முல்லைத்தீவு கமநல அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைப்பு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த பெரும்போகத்தின்போது 22ஆயிரத்து 75ஹெக்டேயர் நிலத்தில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியும் என எதிர்பார்க்கப்பட்டு, 21,800ஹெக்டேயரில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் இம்முறை பெரும்போக நெற்செய்கைக்கான தரவுகள் அந்தந்த கமநலசேவை நிலையங்களூடாக பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதேவேளை, அநுராதபுரம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இருந்த, வெலிஓயா, சம்பத்நுவர கமநலசேவை நிலையம், தற்போது முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதற்குரிய தரவுகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையிடம் பெறவேண்டியுள்ளது.

இவ்வாறு அனைத்துத் தரவுகளும் பெறப்பட்ட பின்னரே முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறை பெரும்போக நெற்பயிர்ச்செய்கை எவ்வளவு மேற்கொள்ளலாம் என்பதைத் தீர்மானிக்க முடியும்.

**நெற்கொள்வனவுக்கு 50மில்லியன் நிதி ஒதுக்கீடு; நெல் சந்தைப்படுத்தலில் விவசாயி களுக்கு ஆர்வமில்லை.**

விவசாயிகளால் நெல்லினைக் கொள்வனவு செய்யுமாறு பாரிய அழுத்தம் வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, அமைச்சினூடாகவும் அரசியல் பிரதிநிதிகளூடாகவும் நிர்வாக ரீதியாகவும் நெல் கொள்வனவை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களம் வலியுறுத்தியிருந்தது.

அந்தவகையில், நெல் சந்தைப்படுத்தல் சபை முதற்கட்டமாக 50மில்லியன் ரூபாவினை நெல் கொள்வனவுக்காக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்கியிருந்தது.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் கையிருப்பில் உள்ள நெல் மதிப்பீடு செய்யப்பட்டது. அதனடிப்படையில், 12 மெற்றிக்தொன் நெல் கையிருப்பில் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் நெல் கொள்வனவினைத் துரிதப்படுத்துமாறு முல்லைத்தீவு கமநல அபிவிருத்தி திணைக்களமும் வலியுறுத்தியிருந்தது.

அதற்கமைய, வெள்ளை நாடு நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கு மாத்திரம் முதற்கட்ட அனுமதி வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை வெள்ளைநாடு நெல்லின் அளவு மிகக் குறைவாகக் காணப்படுவதுடன், சிகப்பு நாடு (கோறா) நெல் வகையே அதிகமாகக் காணப்படுகின்றது.

கோறா நெல்லினைக் கொள்வனவு செய்வதற்குரிய அனுமதி இதுவரை கிடைக்கவில்லை. இருப்பினும் முதற்கட்டமாக குமுழமுனையில் களஞ்சியசாலை வழங்கப்பட்டு நெல் சந்தைப்படுத்தல்சபை நெல்கொள்வனவினை ஆரம்பித்துள்ளது.

அதேபோல் புதுக்குடியிருப்பிலும் களஞ்சியசாலை ஒன்று தெரிவுசெய்யப்பட்டு நெல்சந்தைப்படுத்தல் சபையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அங்கும் நெல் கொள்வனவு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் தற்போது உலகளாவிய ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற கருத்து நிலவுவதால், தற்போது விவசாயிகள் நெல்லைச் சந்தைப்படுத்துவதில் ஆர்வமின்றிக் காணப்படுகின்றனர்.

மேலும் ஒரு கிலோகிராம் கீரிச்சம்பா நெல் 105ரூபா, சம்பா 100ரூபா, நாடு 95ரூபா என்ற விலை நிர்ணய அடிப்படையில் நெல்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**5,376 விவசாயிகளுக்கு ஜப்பானிய உரம் வழங்கிவைப்பு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா தவிர்ந்த ஏனைய 10கமநலசேவை நிலையங்களின் கீழுள்ள 5ஆயிரத்து 376 விவசாயிகளுக்கு ஜப்பான் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 1.25ஏக்கருக்கு உட்பட்ட வயலில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 25கிலோகிராம் உரம் வழங்கப்பட்டதுடன், 2.5ஏக்கருக்கு உட்பட்டு நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 50கிலோகிராம் உரமும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், மொத்தமாக 22ஆயிரத்து 876மெற்றிக்தொன் உரம் இவ்வாறு விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

# சுகாதாரப் பணியாளர்கள் இன்று வேலைநிறுத்தம்

ஆய்வுக்கூட வைத்திய சேவையுடன் தொடர்புடைய ஐந்து தொழில் பிரிவுகளைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் இன்று (24) அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

ஏழு கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளதாக கதிரியக்க தொழில்நுட்ப வல்லுனர்கள் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

இன்று காலை 08 மணி முதல் நாளை (25) காலை 08 மணி வரையான 24 மணிநேரத்தில் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இன்று சி.டி. பரிசோதனை, எக்ஸ் ரே பரிசோதனைகள், எம்.ஆர்.ஐ. பரிசோதனை, சகல இரசாயன பரிசோதனைகளும் முடங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சானக்க தர்மவிக்ரம மேலும் குறிப்பிடுகையில்,

இந்த வேலைநிறுத்தத்தில் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள், இரசாயன ஆய்வு தொழில் வல்லுனர்கள், மருந்தியல் வல்லுனர்கள், உடல் சிகிச்சையாளர்கள், சிகிச்சை நிபுணர்கள் ஆகிய பிரிவினர் பங்குபற்றவுள்ளனர்.

ஏழு கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். சேவைக்கு இணைத்துக்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக காலந்தாழ்த்தப்பட்டு வருகின்றன. இதுவும் ஒரு கோரிக்கையாக அமையும். மேலும், இந்த வேலைநிறுத்தத்தால் சி.டி. பரிசோதனை, எக்ஸ் ரே பரிசோதனைகள், எம்.ஆர்.ஐ. பரிசோதனை, சகல இரசாயன பரிசோதனைகள், மருந்து விநியோகம், வெளியிடுதல் ஆகிய சேவைகள் முடங்கும் என எச்சரிக்கை விடுத்தார் .

## போலிச் சான்றிதழ்...

ஒருவர் தெரிவித்தார். இந்த 29 பிள்ளைகளும் கல்வியமைச்சின் உத்தியோகபூர்வ பெயர், பதவி மற்றும் கடிதத் தலைப்பைப் போலியாக உருவாக்கி போலி ஆவணங்களைத் தயாரித்து இந்தப் பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக மேலதிக செயலாளர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

## அநீதியாக...

உரிய பதில் கிடைக்கவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று முன்தினம் (22) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை கட்டணமும் 150 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதால், அதனை மாணவர்களால் தாங்க முடியாதுள்ளது.

இதன்பிரகாரம், முதலாம் வருட மாணவர்கள் 67ஆயிரத்து 500 ரூபா செலுத்த வேண்டியுள்ளது. அது 40ஆயிரம் மற்றும் 27ஆயிரத்து 500 ரூபா என இரண்டு தவணைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

அந்த 27ஆயிரத்து 500 ரூபா செலுத்த முடியாமையால் 15ஆயிரம் மற்றும் 12ஆயிரத்து 500 ரூபாவாக பிரிக்கப்பட்டுள்ளது. இது பாரதூரமான விடயம். அதேபோல் பரீட்சைக் கட்டணத்தை 2ஆயிரத்து 500 ரூபா அதிகரித்த பிறகும் 08 பாடங்களுக்கும் மேலதிகமாக 20ஆயிரம் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் மீண்டும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எந்த அடிப்படையில் இக்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது, கட்டணத்தை அதிகரிப்பதாக இருந்தால் அது மாணவர்களுக்கு சாதகமான அதிகரிப்பாக இருக்க வேண்டும்.

நுழைவுக் கட்டணம், பரீட்சை கட்டணம், பதிவுக் கட்டணம் என்பவற்றின் அதிகரிப்பை இடைநிறுத்தி மீளாய்வு செய்து இதற்கு சாதகமான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## 4 துறைகள்..

இலங்கை - இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஊடாக பரிமாற்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதன்மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய சபாநாயகர், இந்தியா வழங்கிவரும் ஆதரவுகளுக்கு நன்றி தெரிவித்தார்.

இங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர் வீடியோ செய்திமூலம், இந்நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இந்தியா தொடர்ந்து ஆதரவளிப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட அங்கத்துவ உறுப்பினர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர்.

## மேலும் சில...

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட்டினால் வெளியிடப்பட்டுள்ளதாக அதிகாரசபை தெரிவிக்கின்றது.

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் ஸ்ட்ரோ (strow), கோப்பைகள், தட்டுகள், கத்திகள், முட்கரண்டிகள், கரண்டிகள், இடியப்ப தட்டு, மாலைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிமுதல் தடை விதிக்கப்படவுள்ளது. இதன்படி, நாட்டினுள் அவற்றின் உற்பத்தி, உள்ளூர் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், இலவசமாக வழங்குதல் அல்லது காட்சிப்படுத்தல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் விதிகளின்படி சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு...

நேற்று (23) ஆரம்பமானது. அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியின் பெருந்தோட்ட தொழிற்சங்க கிளையான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

"மலையக மக்கள் இந்நாட்டுக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ளன.

எனினும், அவர்களின் பொருளாதார மேம்பாடு, வாழ்வாதார மேம்பாடு, உரிமைகள் தொடர்பில் எந்தவொரு அரசும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட மலையக மக்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குமாறு வலியுறுத்தியே கையெழுத்து திரட்டப்படுகின்றது" - என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்தது.

அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கிட்ணன் செல்வராஜ், செயலாளர் டி.எம். பிரேமந்திர, உப செயலாளர் கலைச்செல்வி உள்ளிட்டோரின் பங்கேற்புடன் கையெழுத்து வேட்டை ஆரம்பமானது.

இதன்போது கருத்து வெளியிட்ட சங்கத்தின் செயலாளர் கூறியவை வருமாறு,

"தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் காணிப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை, கல்வி, சுகாதாரப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படவில்லை.

மாறாக தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவும் கொள்ளையடிக்கப்படுகின்றன.

இதற்கு இடமளிக்க முடியாது. மக்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுக்க எமது சங்கம் முன்னின்று செயற்படும்" - என்றார்.

## கணவர் துன்புறுத்தலென...

தெரிவித்து உயிரிழந்த மகாமணி தயானி மூன்று பக்க கடிதமொன்றையும் எழுதியுள்ளதாகவும் அந்த கடிதம், அவரின் திருமணச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பன வாவிக்கு அருகிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண், தனது 09 மாத குழந்தையுடன் லிந்துலை, லோகி தோட்டத்திலுள்ள அவரின் வீட்டுக்கு அருகிலுள்ள வாவியில் குதித்து தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்று சந்தேகிப்பதாக லிந்துலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சிசிர குமார தெரிவித்தார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் நீரில் மிதந்துகொண்டிருந்ததாகவும் குழந்தை காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். குழந்தையும் உயிரிழந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

## பாராளுமன்றத்தில்...

அதனை தொடர்ந்து உரையாற்றிய சபை முதல்வர் பிரசன்ன ரணதுங்க, 10.30 மணிக்கு பின்னர் எந்த கேள்விக்கும் பதிலளிக்க மாட்டோம். நீங்கள் விரும்பியதை செய்துகொள்ளுங்கள். எதிர்த் தரப்பினருக்கு ஏற்றவாறு செயற்பட முடியாது என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவை விளித்து பேசியிருந்தார்.

அதன் பின்னர் பிரதி சபாநாயகர், உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக செயற்படவேண்டும். சபை முதல்வர் கூறியது போன்று ஒரு மணிநேரமே கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த ஒரு மணிநேரம் முடிவடைந்து விட்டது. அதனால், தேவையில்லாத விடயங்களுக்கு நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்று அறிவித்திருந்தார்.

தொடர்ந்து நளின் பண்டார எம்.பி. பிங்கிரிய பிரதே சபையில் பொதுஜன பெரமுனவின் கூட்டங்கள் இடம்பெறுவதாக தெரிவித்து இதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்று கேள்வி எழுப்பியவரை தொடர்ந்து, அவர் பொருத்தமற்றவகையில் கேள்வி எழுப்புவதாக தெரிவித்து ஆளுங்கட்சியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அதனை தொடர்ந்து பிரதமர் தினேஷ் குணவர்தன, பிரச்சினைக்கு பொருத்தமற்ற வினாக்களை கேட்கிறார்கள். சபை அமர்வை முன்னெடுக்க முடியாவிட்டால் சபையை ஒத்திவைக்குமாறு பிரதி சபாநாயகருக்கு அறிவித்துவிட்டு பிரதமர் வெளியேறியிருந்தார்.

கேள்வி கேட்பதற்கு தமக்கு உரிய நேரம் வழங்கப்படுவதில்லை என்று தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அமைதியற்ற வகையில் செயற்பட்டதால், அதிருப்தியடைந்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபை அமர்வை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் 10 நிமிடங்களின் பின்னர் மீண்டும் சபை கூடியது.

அதன்போது, ''பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளினால், பாராளுமன்றத்துக்கு எதிராக மக்கள் நிலைப்பாடுகளை வெளியிட்டு வருகிறார்கள். நாம் நேரத்தை வீணடித்து வருகிறோம். பாராளுமன்றத்தின் உயரியத் தன்மையை பாதுகாக்க தவறியுள்ளோம். பாராளுமன்றம் என்பது எமது நாட்டிலுள்ள உயரிய நிறுவனமாகும். இங்கு முன்னெடுக்கும் செயற்பாடுகளே எமது கௌரவத்தை பாதுகாக்கும். கேள்வி கேட்பதற்கு சட்டமுறைகள் இருக்கின்றன. அவற்றை பின்பற்றியே கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.

இதற்கு முன்னர் கேள்வி கேட்பதற்கு எதிர்த் தரப்பினருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அதனை அவர்கள் முறைகேடாக பயன்படுத்திக்கொண்டார்கள். இரு தரப்பினரும் இந்த சபையின் தலைமை பீடத்துக்கு வந்து கூச்சலிட்டு, இங்கு அமர்ந்திருப்பவரை அச்சுறுத்துவது நாட்டையும் மக்களையும் மதிக்காத வகையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடாகும்" என்று அறிவித்திருந்தார்.

மேலும், சபை தலைமை பீடத்துக்கு அருகில் வந்து பிரதி சபாநாயகருக்கு அச்சுறுத்தல் விடுத்தமையின் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா பண்டார ஆகியோரை சபை அமர்விலிருந்து வெளியேறுமாறு சபாநாயகர் அறிவித்திருந்தார். அதனை தொடர்ந்து அவர்கள் இருவரும் சபையிலிருந்து வெளியேறினர் .

## தலதா பெரஹெராவில்...

இரவு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

கண்டி ஏரி வட்டத்தில் நின்று, யானைகளில் வீதி உலாவை பார்த்துக் கொண்டிருந்த ஒரு குழுவினர், யானைகளின் அட்டகாசத்தையடுத்து ஏரியில் குதித்தபோது, பொலிஸ் உயிர்காப்புக் குழுவினர் மற்றும் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

இரண்டு யானைகளும் தலதா வீதி வழியாக ஓடியபோது, யானை ஒன்று குயின்ஸ் ஹோட்டலின் தாழ்வாரத்தில் புகுந்து இடையூறு ஏற்படுத்தியது.

பின்னர், பாகர்கள் பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் அவற்றை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

இடையூறு ஏற்பட்ட இரண்டு யானைகளை அகற்றிய பிறகு, ஏற்பாட்டுக் குழுவினர் ஊர்வலத்தை தொடர்ந்து வீதி உலா வரச் செய்தனர். இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

# புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராஜதந்திரிகள் நற்சான்றிதழ் பத்திரங்களை கையளித்தனர்





இலங்கைக்கான புதிய தூதுவர்களாக நியமனம் பெற்றுள்ள இருவரும் உயர்ஸ்தானிகர் ஒருவரும் நேற்று (23) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ் பத்திரங்களை கையளித்தனர்.

இத்தாலி குடியரசு மற்றும் ஜேர்மனி பெடரல் குடியரசு ஆகியவற்றின் இலங்கைக்கான புதிய தூதுவர்களும், பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்துக்கான புதிய உயர்ஸ்தானிகருமே இவ்வாறு நற்சான்றிதழ் பத்திரங்களைக் கையளித்தனர்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த தூதுவர்களை தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க வரவேற்றார்.

நற்சான்று பத்திரங்களை கையளித்தவர்களின் விபரம் கீழ்வருமாறு,

01. பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்துக்கான உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பெட்ரிக் (Andrew Patrick)

02. ஜேர்மனி பெடரல் குடியரசின் தூதுவர் - கலாநிதி பெலிக்ஸ் நியூமன் (Felix Neumann)

03. இத்தாலி குடியரசின் இலங்கைக்கான தூதுவர் - டாமியானோ பிரான்கோவிக் (Damiano Francovigh)

நற்சான்று பத்திரங்களைக் கையளித்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன உள்ளிட்டவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# வெள்ளிக்கிழமை முதல் நலத்திட்ட உதவிகள்

சிறுநீரக நோயாளர்கள், ஊனமுற்றோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவுகளுக்காக திறைசேரி அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் 2,684 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் கணக்கில் வெளியிட்டுள்ள குறிப்பில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி நாளை வெள்ளிக்கிழமை முதல் முதியோர் கொடுப்பனவை தபால் நிலையங்களிலும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவுகளை பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

# வேறொரு நாட்டின் குடியுரிமை பெற்ற இலங்கை முஸ்லிம் ஒருவர் இங்கு வந்து திருமணம் செய்ய முடியாதென்ற தடை நீக்கப்பட வேண்டும்

## ரிஷாட் சபையில் வலியுறுத்து

"வேறொரு நாட்டின் குடியுரிமை பெற்ற இலங்கை முஸ்லிம் ஒருவர், இங்கு வந்து திருமணம் செய்ய முடியாது என்ற தடை நீக்கப்பட வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் (22) உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

"பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான கொண்டுவந்த இந்தப் பிரேரணையானது காலத்திற்கு தேவையான ஒன்றாகும். பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களின் வசதிகளைப் பார்க்கின்றபோது மிகவும் மோசமான ஒரு நிலையே காணப்படுகின்றது. திருமணப் பதிவொன்றின் கொடுப்பனவாக 1,140 ரூபா மாத்திரமே வழங்கப்படுகின்றது. அதில் 240 ரூபா அரசுக்கு வழங்கினால் 900 ரூபா அளவிலேயே அவர்களுக்கு கொடுப்பனவாகக் கிடைக்கின்றது. பிறப்புச் சான்றிதழ் பதிவாளருக்கு பிறப்புச் சான்றிதழ் ஒன்றுக்கு 75 ரூபா வழங்கப்படுகிறது. அலுவலக பராமரிப்புக்கென மாதம் ஆயிரம் ரூபாவும், அதுவும் கொழும்பு போன்ற மாவட்டங்களில் ஆயிரம் ரூபாவும் தூர இடங்களில் கிராமப்புறங்களில் உள்ள பதிவாளர்களுக்கு 700 ரூபாவும் வழங்கப்படுகிறது. காகிதாதிகள், உபகரணங்கள் செலவுக்கு மாதம் ஒன்றிற்கு 500 ரூபாவே பதிவாளர்களுக்கு வழங்கப்படுகிறது. தற்போதைய வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும்பொழுது இந்தக் கொடுப்பனவுகள் மிகவும் சொற்ப அளவிலேயே இருக்கின்றன. இவற்றைக் கவனத்திற்கொண்டு மேற்படி கொடுப்பனவுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேபோன்று, உதாரணமாக கம்பஹா போன்ற மாவட்டங்களில் உள்ள ஒரு திருமணப் பதிவாளர் கொழும்புக்கு வந்து ஒரு திருமணப் பதிவைச் செய்யும்போது பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

குறித்த பதிவாளர் கொழும்பில் உள்ள பதிவாளர் நாயக திணைக்களத்துக்குச் சென்று அனுமதியைப் பெறவேண்டிய கட்டாயத்தில் உள்ளார். இதனால் பல நாட்களைச் செலவிட வேண்டிய துர்ப்பாக்கியம் அவருக்கு ஏற்படுகின்றது. அவருக்கு 4,000 ரூபா கொடுப்பனவு கிடைக்கின்ற போதும் அவர் பல நாட்கள் நேரவிரயம் செய்யவேண்டிய சூழ்நிலையும் உருவாகின்றது.

எனவே, இந்தப் பதிவை ஆன்லைன் முறையில் செய்ய முடியும். ஏனெனில், தற்போதுள்ள தொழில்நுட்ப வசதி அதற்கு ஏதுவாக இருக்கும். இவ்வாறான முறைமை பின்பற்றப்பட்டால் பதிவாளர்களுக்கு தமது காரியங்களை நிறைவேற்ற இலகுவாக இருக்கும். இதன்மூலம் செலவு மற்றும் நேரம் மட்டுப்படுத்தப்படுகின்றது.

அதேபோன்று, வெளிநாட்டில் உள்ள இலங்கையர், குறிப்பாக, முஸ்லிம் ஒருவர், அந்த நாட்டின் குடியுரிமையைப் பெற்றுவிட்டார்



என்றால் அவர் மீண்டும் நமது நாட்டுக்கு வந்து திருமணம் செய்வதற்கு அதாவது, திருமணப் பதிவை மேற்கொள்வதற்கு தடைகள் இருக்கின்றன. இலங்கையில் வாழும் ஒரு முஸ்லிம் பெண்ணை, வெளிநாட்டுக் குடியுரிமை பெற்ற முஸ்லிம் ஒருவர் இங்கு வந்து திருமணம் செய்வதற்கு பல சிரமங்கள் உள்ளன.

இது முஸ்லிம்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படுகின்ற தடையாகவே காணப்படுகின்றது. அவ்வாறான ஒருவர் திருமணப் பதிவை மேற்கொள்வதாக இருந்தால் இந்தியாவுக்கோ அல்லது வேறொரு நாட்டுக்கோ அந்த மணப்பெண்ணை வரவழைத்து திருமணம் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதன் மூலம் நமது நாட்டுப் பணமும் விரயமாகின்றது.

எனவே, இது தொடர்பில் அக்கறை எடுத்து, இந்தச் சட்டத்தில் ஆக்கபூர்வமான திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

2013ஆம் ஆண்டில் ஒரு சுற்றுநிருபம் வெளியானது. அந்தச் சுற்றுநிருபத்தில் திருமணப் பதிவுக்கு "இலங்கை முஸ்லிமாக இருக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. எனவே, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியுரிமை பெற்ற இலங்கை முஸ்லிம் ஒருவர், இங்கு வந்து திருமணம் செய்ய முடியாத நிலையைக் கருத்திற்கொண்டு இந்தத் தடை நீக்கப்பட வேண்டும். ஏனைய மதத்தினருக்கு இவ்வாறான தடைகள் இல்லை.

எனவே, முஸ்லிம்களுக்கு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தத் தடையை நீக்குமாறு வேண்டுவதுடன், இலங்கையில் வாழும் பெண்களின் அடிப்படை உரிமையும் இதனால் மீறப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்" என்றார்.

# போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தக் கோரியும் இறந்தவருக்கு நீதி கோரியும் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



வவுனியா நிருபர்

போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தக் கோரியும் இறந்தவருக்கு நீதி கோரியும் வவுனியாவில் சடலத்துடன் ஆர்ப்பாட்டம் ஒன்று செவ்வாய்க்கிழமை (22.08) முன்னெடுக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு சென்றிருந்த இளம் குடும்பஸ்தரை அங்கு மது அருந்திக்கொண்டிருந்த இருவர் அழைத்து கதைத்துள்ளனர்.

இதன்போது, குறித்த இளம் குடும்பஸ்தரை தாக்கி நிலத்தில் தூக்கிப் போட்டுள்ளனர். இதனால் இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார். அங்கு நின்றவர்கள் அவரது வீட்டிற்கு தகவல் வழங்கியதையடுத்து, படுகாயமடைந்த குடும்பஸ்தரின் தாயார் அங்கு சென்று வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்த போதும் குறித்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக் கிழமை மரணமடைந்தார்.

இச் சம்பவத்தில், வவுனியா, மகாறம்பைக்குளம் காந்தி வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரதீபன் (தீபன்) என்பவரே உயிரிழந்துள்ளார். இவரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று (22.08) பூந்தோட்டம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இதன்போது, சடலத்தை எடுத்து வந்த அக் கிராம மக்களும், கிராம பொது அமைப்புகளும் சடலத்துடன் போதைப் பொருள் பாவனைக்கு எதிராகவும், இறந்தவருக்கு நீதி கோரியும் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "ஐஸ் - கஞ்சா- மாபா- ஹெரோயின் - போதை மாத்திரை என்பவற்றை தடை செய், தொடர்ச்சியாக அடாவடித்தனம் செய்வோரை கைது செய், மாணவர் சமூகத்தைச் சீரழிக்கும் போதைப் பொருட்களை தடை செய்" - என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்:** புதிய தொழில் வியாபாரங்களை ஆரம்பித்தால் சிக்கல் உண்டு. செலவு செய்யும்போது சிந்தித்துச் செய்யுங்கள்.

**ரிஷபம்:** வாகனங்களால் அதிக சுகமும் லாபமும் உண்டு. புகழ்,செல்வாக்கு சிறப்பாக அமையும்.

**மிதுனம்:** எதிரிகள் உங்களிடம் பணிந்து நடந்து கொள்வார்கள்.தற்காலிக தொழில் வியாபாரத்தில் நல்ல லாபம்.

**கடகம்:** சரியான முடிவுகளை எடுக்க முடியாது திண்டாடுவீர்கள். அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்காதீர்கள்.

**சிம்மம்:** வாகனங்களில் தூர பயணங்களை ஒத்தி வைப்பது நல்லது. அனைத்தும் மந்த கதியில் இயங்கும்.

**கன்னி:** முயற்சிகள் அனைத்தும் பலிக்கும் நாள். நினைத்த காரியத்தை முடித்தே தீருவீர்கள்.

**துலாம்:** உங்கள் மதிப்பையும் கௌரவத்தையும் நீங்களே கெடுத்துக் கொள்வீர்கள். வீண் பேச்சு வேண்டாம்.

**விருச்சிகம்:** நீங்கள் விரும்பிய உணவு, படுக்கை அமையும், முக மலர்ச்சியுடன் சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள்.

**தனுசு:** ஆணவத்தால் அவமானமடைய வேண்டி வரும். பணத்தின் பெருமையை அறியும் நாள்.

**மகரம்:** புதிய நண்பர்கள் தொடர்பால் புதிய உறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். தேவைக்கேற்ப பணம் கிடைக்கும்.

**கும்பம்:** உங்கள் கீழ் உள்ளவர்களை நம்பி எதையும் செய்யலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் நடைபெறும்.

**மீனம்:** தந்தையின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.தர்ம சிந்தனையுடன் செயலாற்றுங்கள்.

**திதி:**நவமி பி.இ.3.10 வரை பின் நவமி

**நட்சத்திரம்:**விசாகம் மு.ப.9.04 வரை பின் அனுஷம்

**யோகம்:** சித்த யோகம் முழுவதும்

**வார சூலை:**தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்ல நேரம்:**மு.ப.11.07 – 12.07 மணி வரை

**ராகு காலம்:**1.37 – 3.07 மணி வரை

**எமகண்டம் :**6.07- 7.37 மணி வரை

**குளிகை:**9.07 - 10.37 மணி வரை

**சந்திராஷ்டமம்:** மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**தனஅதிஷ்டம்:**புனர்பூசம்,விசாகம், பூரட்டாதி (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்:** அட்டமி - நவமி

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**



இறக்குவானை பரியோவான் தமிழ்த் தேசிய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள மகா வித்தியா கணபதி ஆலய கும்பாபிஷேக பெருவிழாவில் சிறப்பு அதிதியாக இந்திய உதவி உயர்ஸ்தானிகர் எஸ்.ஆதிரா கலந்துகொண்டதுடன் மாணவர்களுடன் தலைமைத்துவ ஆலோசனைகளையும் வழங்கினார்.




சிங்கப்பூர் மகாகருண பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் 62 மாணவர்கள் மற்றும் 60 கர்ப்பிணிப் பெண்கள் உள்ளடங்கலாக 187 பேருக்கான உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன. வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் உள்ள பௌத்த பொதுநோக்கு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (22.08) மாலை குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

**படங்கள்:** வவுனியா நிருபர்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒகஸ்ட் 24ஆம் திகதி, வியாழக்கிழமை

# துப்பாக்கிச் சூட்டு கலாசாரத்தை தொடரவிடலாமா?

போதைப்பொருள் வியாபாரிகளுக்கிடையிலான முரண்பாடுகளினால் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற 60 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 36 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், தனிப்பட்ட பிரச்சினைகளினால் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களிலும் சிலர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை ஆய்வுக்குட்படுத்தியபோது,போதைப்பொருள் வியாபாரத்தின்போது இடம்பெறும் பணப் பரிமாற்றத்தின்போது இடம்பெறுகின்ற முரண்பாடுகள் காரணமாகவே பல கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 60 வரையான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்பவங்களில் 36 பேர் வரையில் உயிரிழந்திருக்கிறார்கள். 28 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளார்கள். காயம் அல்லது உயிரிழப்புகள் எதுவும் இடம்பெறாத துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் 06 இடம்பெற்றுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, சமமான சம்பவங்களே இதுவரையில் பதிவாகியுள்ளன. காணிப் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை போன்ற தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த ஆண்டில் இதுவரையில் 370 படுகொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் மாதாந்தம் 40 முதல் 50 வரையிலான படுகொலைகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும், நாகரிகமற்ற மனித சமூகம் வாழும் நாடாக மாறியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். போதைப்பொருள் வியாபாரம், காணிப் பிரச்சினை, தகாத உறவு போன்ற காரணிகளினால் இடம்பெறும் மனிதப் படுகொலைகளை தடுக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாட்டில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன. இவற்றின் மூலம் மூடிமறைக்க எத்தனிக்கும் இரகசியம் என்ன என்ற கேள்வி எழுகிறது.

கடந்த காலங்களிலும் சமூக விரோத குற்றச்செயல்கள் மற்றும் பாதாள உலக செயற்பாடுகளுடன் தொடர்புபட்டவர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்துவைக்கப்பட்டு பின் சுட்டுக்கொல்லப்படுகின்றபோது சமூக விரோத செயற்பாடுகளுடன்தொடர்புபட்டவர்கள் என்ற காரணத்தினால் அதுபற்றிய கருத்தாடல்கள் பொது வெளியில் பெரிதாக மேற்கொள்ளப்படுவதில்லை. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் கொல்லப்பட்டவர்களை நோக்கும்போது அவர்கள் ஏதாவது ஒரு வழக்கின் சாட்சியாளராகவோ அல்லது சட்டத்திற்கு தேவைப்பட்டவராகவோ இருக்கும் நிலைமை காணப்படுகிறது.

சமூக விரோத செயற்பாடுகளுடன் தொடர்புபடும் இளைஞர்கள் ஒடுக்கப்பட்ட வறுமை நிலைக்குட்பட்ட சமூகங்களைச் சார்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்கள் பெரும் பண முதலைகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் சட்டவிரோத செயல்களைச் செய்யும் கைக்கூலிகளாகவே பயன்படுத்தப்படுகின்றனர். ஆனால், குற்றச்செயல்களுக்கு மூலகர்த்தாவாகக் காணப்படும் பெரும்புள்ளிகள் சமூகத்தில் உல்லாசமாகவும் சட்டமியற்றுபவர்களாகவும் அதிகார பலம்படைத்தவர்களாகவும் வாழும்போது அடித்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு தொடர்ச்சியாக சட்டத்தை மீறி தண்டிக்கப்படுகின்றனர்.

அதிகாரபலம், இலாபவெறி உள்ளிட்ட இந்த சமூக முறைமையின் கேடுகளாலேயே குற்றவாளிகள் உருவாகின்றனர்.

ஆதலால் அச்சமூக முறைமை மீது பழி சுமத்தாமல் அதனை மாற்றியமைக்க முயற்சிக்காமல் குற்றவாளிகளை மாத்திரம் தண்டிப்பதன் மூலம் அமைதி உருவாகி விடுமா என்ற கேள்வி எழுகிறது. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வாறான ஜனநாயக விரோதப் போக்கு உண்மையான குற்றவாளிகளையும் அதன் சூத்திரதாரிகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளேயாகும்.

குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதற்கு சட்டம், நீதிமன்றம் போன்றன இருக்க அதனை விடுத்து குறுக்கு வழிமுறைகளைப் பின்பற்றுவது பேராபத்தாக அமையும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஆணையிடுதலும் அதிகாரமளிப்பதும் யார்? இந்த நிலை தொடருமானால், சந்தேகநபர் என யாரையும் கைது செய்து ஏதேனும் காரணம் சொல்லிவிட்டு சுட்டுப்போட்டுக் கொண்டு போகும் நிலை ஏற்படலாம். அரச எதிர்ப்பாளர்கள்,மாற்றுச் சிந்தனையாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், புத்திஜீவிகள், சமூக அரசியல் செயற்பாட்டாளர்கள் எனப்படுவோர் மீதும் கொலைக் கலாசாரம் பிரயோகிக்கப்படலாம்.

துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம் தொடர்வது நாட்டுக்கு நல்லதல்ல.



# எதிர்பார்ப்பை உயர்த்தும் 'பிரிக்ஸ்'!

உலக நாடுகளின் குறிப்பாக, ஜி7, ஐரோப்பியக் கூட்டமைப்பில் உள்ள நாடுகளின் கவனம் தென்னாபிரிக்கத் தலைநகர் ஜோகன்னஸ்பர்கில் நடைபெறும் 'பிரிக்ஸ்' மாநாட்டில் குவிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 'பிரிக்ஸ்' கூட்டமைப்பின் 15ஆவது மாநாடு பல்வேறு காரணங்களால் முக்கியத்துவம் பெறுகிறது. மேலை நாடுகள் மட்டுமல்ல, வளர்ச்சியடையும் நாடுகளும் இந்த மாநாட்டைக் கூர்ந்து கவனிக்கின்றன.

அமெரிக்க - சோவியத் யூனியன் பனிப்போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், எல்லா சர்வதேச அமைப்புகளும் மேற்கு வல்லரசுகளின் கைப்பாவைகளாக மாறிவிட்டிருந்த நிலைமை. கீழை நாடுகளைத் தங்களுக்கு சமமான இடத்தில் உட்கார வைத்துப் பேச அவை தயாராக இருக்கவில்லை. அப்படிப்பட்ட சூழலில், மேற்கு வல்லரசுகளை முற்றிலுமாகத் தவிர்த்து உருவாக்கப்பட்ட மாற்றுக் கூட்டமைப்புத்தான் 'பிரிக்ஸ்'.

உலக மக்கள்தொகையில் 40%, உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23% வலிமையுடன் கூடிய கூட்டமைப்பாக 'பிரிக்ஸ்' உயர்ந்திருக்கிறது. 2009இல் நடந்த முதலாவது மாநாட்டில் தென்னாபிரிக்கா இருக்கவில்லை. 2010இல் தென்னாபிரிக்காவும் சேர்ந்து கொண்டபோது, 'பிரிக்' என்பது 'பிரிக்ஸ்' என்று மாறியது. வளர்ச்சியடைந்த நாடுகளின் ஜி7 கூட்டமைப்புக்கு நிகரான மாற்றுக் கூட்டணியாக இந்த அமைப்பு உருவெடுத்திருக்கிறது.

மேலை நாடுகளின் அமைப்புகளைப்போல இன ஒற்றுமையோ, பொதுவான பாதுகாப்புக் கூட்டுறவோ இல்லாமல் இருப்பது 'பிரிக்ஸ்' அமைப்பின் பலவீனம். அதையே பலமாகவும் கருதலாம். சர்வதேச அரசியலுக்கு 'பிரிக்ஸ்' மூன்று பங்களிப்புகளைச் செய்திருக்கிறது. தங்களது அரசியல் அமைப்பு, கலாசாரம், கொள்கைகள், வெளியுறவுப் பார்வை, இன ஒற்றுமை ஆகியவற்றை முன்னிறுத்தாமல் உலகமய அமைப்பை உருவாக்க முடியும் என்பதை உணர்த்தி இருக்கிறது 'பிரிக்ஸ்'.

பொருளாதார தளத்தில், உலக வங்கிக்கு மாற்றாக 2014இல் என்.டி.பி. என்கிற 'புதிய வளர்ச்சி வங்கியை உருவாக்கியிருக்கிறது. இதுவரை, முக்கியமான 100 கட்டமைப்புத் திட்டங்களுக்கு, என்.டி.பி. 34 பில்லியன் டொலர் கடனுதவி வழங்கியிருக்கிறது. 2030க்குள் உலக வங்கியைப் பின்னுக்குத் தள்ளி 350 பில்லியன் டொலர் கடனுதவி வழங்கும் நிலைக்கு என்.டி.பி. உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது இரண்டாவது பங்களிப்பு.

தற்போதைய உலக நிதிப்பரிமாற்றங்கள் அனைத்தும் அமெரிக்க டொலரில் மட்டுமே நடைபெறுகின்றன. அதற்கு மாற்றாக இன்னொரு செலாவணியிலோ, இப்போது இந்தியா முன்னெடுத்திருக்கும் அந்தந்த நாட்டின் செலாவணியிலோ வர்த்தகம் என்பது 'பிரிக்ஸ்' முன்மொழியும் மாற்று. இதற்கு முன்னர் 'யூரோ' மூலம் ஐரோப்பியக் கூட்டமைப்பு தோற்றுப்போன முயற்சிதான் என்றாலும் 'பிரிக்ஸ்' விரிவுபடுமானால், அந்த முயற்சி வெற்றிபெறக்கூடும்.

'பிரிக்ஸ்' அமைப்பில் இணைய 40 நாடுகள் வரிசைகட்டி நிற்கின்றன. அவற்றில் 19 நாடுகள் முறையாக விண்ணப்பித்திருக்கின்றன. ஆர்ஜென்டீனா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஈரான் ஆகிய நான்கு நாடுகளைச் சேர்த்துக்கொள்வது என்பதில் கருத்தொற்றுமை ஏற்பட்டிருப்பதால், அவை இணைக்கப்படக் கூடும்.

ஜோகன்னஸ்பர்க் மாநாட்டுக்கு, 'பிரிக்ஸ்' தலைவர்கள் மட்டுமல்லாமல், ஆபிரிக்கக் கூட்டமைப்பின் 55 உறுப்பு நாட்டுத் தலைவர்களும், 20 வளர்ந்து வரும் சிறிய ஆசிய, தென்னாபிரிக்க, பசுபிக் தீவு நாடுகளின் தலைவர்களும் தென்னாபிரிக்காவால் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நாடுகள், வருங்காலத்தில் அணிசேரா நாடுகள் அமைப்புபோல, வலிமையான கூட்டணியாக ஒருங்கிணையக்கூடும்.

விண்ணப்பித்திருக்கும் நாடுகளை எல்லாம் 'பிரிக்ஸ்' கூட்டமைப்பில் இணைத்துக்கொள்வதில் ஆபத்து இருப்பதை இந்தியா உணர்ந்தே இருக்கிறது. உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமான சீனாவின் கைப்பாவைகளாக அந்த நாடுகள் மாறிவிடவும், அமெரிக்காவுக்கு எதிரான அமைப்பாக 'பிரிக்ஸ்' மாறிவிடவும் வாய்ப்பிருப்பதால் புதிய உறுப்பினர்களை இணைப்பதில் இந்தியா கவனமாக இருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

2019க்குப் பிறகு தலைவர்கள் நேரடியாகக் கலந்துகொள்ளும் மாநாடு இதுதான். 2022இல் ஏனைய பகுதிகளில் கொவிட் 19 பலவீனப்பட்டிருந்தாலும், சீனாவில் குறையாததால், காணொலி மாநாடாகத்தான் 'பிரிக்ஸ்' அமைப்பு கூடியது. இந்த முறை ரஷ்ய அதிபர் புட்டின் மட்டும் நேரில் வராமல் காணொலி மூலம் கலந்து கொள்கிறார். அவருக்கு எதிராக சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணை இருப்பதால் அவரால் கலந்துகொள்ள இயலவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை, 2020 கல்வான் தாக்குதலுக்குப் பிறகு, இந்திய பிரதமர் நரேந்திர மோடியும், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கும் நேரடியாகச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஜோகன்னஸ்பர்கில் ஏற்படக்கூடும். சாமர்கண்டில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டிலும், பாலி ஜி20 மாநாட்டிலும் நேருக்கு நேர் சந்தித்தனர் என்றாலும், அந்தச் சந்திப்புகள் மரியாதை வணக்கத்துடன் முடிந்துவிட்டன.

இன்னும் இரண்டு வாரங்களில் இந்தியா ஜி20 மாநாட்டைத் தலைமையேற்று நடத்த இருக்கிறது. அதில் சீனா உள்ளிட்ட 'பிரிக்ஸ்' உறுப்பு நாடுகள் அனைத்தும் கலந்து கொள்வதில்தான் மாநாட்டின் வெற்றி அடங்கியிருக்கிறது. அந்த மாநாட்டின் தீர்மானங்களில் கருத்தொற்றுமை ஏற்படுவதும் அவசியம். அதற்கு, 'பிரிக்ஸ்' மாநாடு வழிகோலும் என்று எதிர்பார்க்கலாம்!

நன்றி - தினமணி

## இன்றைய நாளில்...

- 1608 – இந்தியாவுக்கான முதலாவது அதிகாரபூர்வ பிரித்தானியப் பிரதிநிதி வில்லியம் ஆக்கின்ஸ் சூரத் நகரை வந்தடைந்தார்.
- 1857 – ஐக்கிய அமெரிக்காவில் பெரும் பொருளாதார நெருக்கடி ஆரம்பமானது.
- 1891 – தோமஸ் அல்வா எடிசன் அசையும் படக்கருவிக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1995 – வின்டோஸ் 95 வெளியிடப்பட்டது.
- 2006 – புளூட்டோ ஒரு கோள் அல்லவெனவும், அது குறுங்கோள் எனவும் உலகளாவிய வானியல் ஒன்றியம் அறிவித்தது.

## நக்கல் நமசிவாயம்

சரியென்றால் இந்தக் காலப்பகுதியில் எலெக்சன் வந்திருக்கோணும்...
அடிக்கிற வெயிலுக்கு குடைகள், மின்விசிறிகள் வாக்காளர்களுக்கு கொடுத்திருப்பாங்கள் வேட்பாளர்கள்...



# ஜப்பான் NPO UNSDG மனித வள அபிவிருத்தி நிறுவனத்தின் மாணவர்கள் சபாநாயகர் மஹிந்த யாப்பாவுடன் சந்திப்பு








ஜப்பான் NPO UNSDG மனித வள அபிவிருத்தி நிறுவனத்தின் மாணவர்கள் குழுவொன்று சாபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் (18) பாராளுமன்றத்தில் சந்தித்தது.

பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருந்த மாணவர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த சபாநாயகர், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்டகாலமாகப் பல்வேறு துறைகளில் குறிப்பாக, பௌத்த கலாசார மற்றும் கல்வி உள்ளிட்ட துறைகளில் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் குறிப்பிட்டார். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் வேளையில் ஜப்பானின் நட்புறவைப் பாராட்டுவதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இந்த மாணவர்கள் சபாநாயகரிடம் கேள்விகளைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றதுடன், பாராளுமன்றத்தின் கண்காணிப்பு பயணத்தில் ஈடுபடுவதற்கும் அவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் திருமதி குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.



நல்லூர் மூத்த விநாயகர் ஆலய பஞ்சதள இராஜ கோபுர மகா கும்பாபிஷேகம் நேற்றுக் காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதி வலம் வந்தார். அதனைத் தொடர்ந்து நாட்டியாஞ்சலி நிகழ்வு இடம்பெற்று, பிரதான கும்பங்கள் வீதி வலம் வந்து பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேக பெருவிழா இடம்பெற்றது. இக்கும்பாபிஷேகப் பெருவிழாவில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

**படம்:** *பு.கஜிந்தன்*

# இலங்கை இராணுவத்திற்கு சீனாவிலிருந்து அதிநவீன தகவல் தொடர்பாடல் வாகனங்கள்





2017 ஆம் ஆண்டு சீன மக்கள் குடியரசின் தேசிய பாதுகாப்பு அமைச்சுக்கும் இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் சீன மக்கள் குடியரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட அதிநவீன தகவல் தொடர்பாடல் அமைப்புகளுடன் கூடிய வாகனங்கள் பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரேமித பண்டார தென்னக்கோன் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன ஆகியோரால் உத்தியோகபூர்வமாக (22) இராணுவ தலைமையக வளாகத்தில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

45 மில்லியன் யுவான் (அமெரிக்க டொலர் 6.2 மில்லியன்) பெறுமதியான இந்த தொடர்பாடல் முறைமை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த வாகனங்கள் அனைத்திலும் அதிநவீன ஈ.எல்.டி. தொடர்பாடல் அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது. குறு அலைவரிசை அமைப்பு மற்றும் அவசர காலங்களில் நேரடி தகவல் தொடர்பாடலுக்கு உதவும் விமானிகள் அற்ற விமானங்கள் (ட்ரோன்கள்) என்பன பொருத்தப்பட்டுள்ளன. இந்த அமைப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கை இராணுவத்தின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு வலையமைப்பை மிகத் திறமையாகவும் ஒருங்கிணைக்கப்பட்ட முறையிலும் இயக்கும் திறனைப் பெறுவதற்கு இலங்கை இராணுவத்திற்கு வாய்ப்பாக அமையும்.



கண்ணகி கலாலயம் கலைஞர்களின் "ஒருத்திகையில் ஒத்திகையில்" நெடுநாடகமும் " எனக்கொரு "அஞ்சலிக்கூட்டம்" என்ற குறுநாடகமும் வெகுவிரைவில் மேடையேறவுள்ளன. இதற்கான ஆரம்ப பூஜை கொழும்பு 14, கிறேண்ட்பாஸ் பபாபுள்ளே பிளேஸ் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது.



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தில் தங்கரத உற்சவம் செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்றது. மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற கொடித்தம்ப பூசையைத் தொடர்ந்து 5.00 மணியளவில் வசந்தமண்டப பூசை இடம்பெற்றது.

**படம்:** *பு.கஜிந்தன்*

# வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் கொலை வழக்கில் திருப்பம்;

## அவரின் ஆடைகளை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு



கொழும்பில் மர்மமான முறையில் உயிரிழந்த வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் தொடர்பான வழக்கு விசாரணையில் கொழும்பு நீதவான் நீதிமன்றம், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

அதன்படி, தற்போது அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் அணிந்திருந்த ஆடைகளை மீட்டு, அவரது மரணத்திற்கான காரணத்தைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய வைத்திய நிபுணர் குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் (22.08. 2023) கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, அங்கு முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் வர்த்தகர் இறந்த இடத்திலும் அவரது வாகனத்திலிருந்து மீட்கப்பட்ட பொருட்களை விசாரணைக்காக ஐவரடங்கிய வைத்திய நிபுணர் குழுவிடம் ஒப்படைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், குறித்த வழக்கு மீதான விசாரணை அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.








பேருவளை,மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) வணிக வார நிகழ்வு பாடசாலை அதிபர் எஸ்.ஆர். குமார் தலைமையில் நடைபெற்றது. பேருவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜயந்த ஸோமரத்ன பிரதம அதிதியாகவும் களுத்துறை கல்வி வலய வணிகப் பணிப்பாளர் திருமதி அனோமா பெரேரா கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் அல் - ஹுமைஸரா தேசிய பாடசாலை பிரதி அதிபர் முஹம்மத் லியாஸ் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் பங்குபற்றினர். புதிய அதிபரின் தலைமையில் ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயம் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளதாக இங்கு உரைநிகழ்த்திய கல்விப் பணிப்பாளர்கள் பாராட்டிப் பேசினர்.

**படங்கள்:** *பேருவளை பீ.எம்.முக்தார்*



பேருவளை அப்ரார் கல்வி நிலைய முக்கியஸ்தர்கள், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன முக்கியஸ்தர்கள், பேருவளை நியூஸ் குழுமத்தின் முக்கியஸ்தர்கள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை பாராளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் எடுக்கப்பட்ட படம்.

**படம்:** *பேருவளை பீ.எம்.முக்தார்*

# நோயாளர்களின் உரிமைகள், பொறுப்புகளை பலப்படுத்தவும்

## சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரை







நோயாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் பலப்படுத்துமாறு சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரைத்துள்ளது.

நோயாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் பலப்படுத்துவதற்கு சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினூடாக முன்மொழிவொன்றைத் தயாரிப்பது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க தலைமையில் சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் கூடியது.

சுகாதார அமைச்சு, நீதி அமைச்சு, இலங்கை மருத்துவ சங்கம், இலங்கை மருத்துவ சபை, சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அரச நிறுவனங்களும் நோயாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். தற்போதுள்ள விதிமுறைகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

எட்டாவது பாராளுமன்றத்தின் சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்ட நோயாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான முன்மொழிவுகளை கலந்துரையாடி அவற்றைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட வைத்திய தொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் மற்றும் நோயாளர்களின் உரிமைகள் குறித்து செயற்படும் தரப்பினர்களால் இவ்விடயம் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இந்த விடயம் தற்பொழுது சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை மற்றும் இலங்கை மருத்துவ சங்கம் சமர்ப்பித்த பிரேரணையை ஒப்பிட்டு இறுதிப் பிரேரணையை தயாரிப்பதற்கு குழு தீர்மானித்தது.

இதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை அலுவலகத்தின் பிரதிநிதி வைத்தியகலாநிதி ஷலாலா அஹ்மடோவா இணக்கம் தெரிவித்தார்.

இந்தியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் இது தொடர்பான முன்மொழிவுகளை ஆய்வு செய்யவும் இந்த முன்மொழிவை வலுப்படுத்த அந்த முன்மொழிவுகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளவும் குழு பரிந்துரைத்தது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, கயாஷான் நாவனந்த, ஜகத்குமார சுமித்ராராச்சி, உபுல் கலப்பதி மற்றும் லலித் குமார ஆகியோர் கலந்துகொண்டனர்.



இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜூலி சங் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார். யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்றைய தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்க தூதர், பல்வேறு தரப்புகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். முன்னதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை சந்தித்த அமெரிக்க தூதர் வடக்கு மாகாணத்திற்கான சமூகப், பொருளாதார சவால்கள் மற்றும் வாய்ப்புகள் தொடர்பாக கலந்துரையாடினார். தொடர்ந்து, யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கும் விஜயம் செய்து அதனைப் பார்வையிட்டார்.

## நாணய மாற்று விதம் (23.08.2023)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.9743 | 214.4433 |
| கனேடியன் டொலர் | 233.0711 | 245.1978 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.7656 | 45.8407 |
| யூரோ | 343.2933 | 359.9608 |
| ஜப்பான் யென் | 2.1708 | 2.2759 |
| சிங்கப்பூர் டொலர் | 232.7193 | 244.6829 |
| ஸ்ரேலிங் பவுன் | 403.4693 | 421.7683 |
| சுவிஸ் பிராங் | 357.7036 | 377.8262 |
| ஐ.அ. டொலர் | 317.4681 | 329.8616 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 859.2554 |
| குவைட் | குவைட் தினார் | 1,050.7818 |
| ஓமான் | ஓமான் றியால் | 841.4224 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.8845 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.3619 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.1912 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.08.22
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5214
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,893,032.00
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 7 9 6 0 1 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3456
சீட்டிழுப்பு திகதி 2023.08.22
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,161,830.40
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 03 07 57 64
விசேட எழுத்து P
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 05460

லக்கி 7 Lucky
திகதி 22.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0040
வெற்றி இலக்கினம் துலாம்
L7 இலக்கம் 0 4
வெற்றி இலக்கங்கள் 6 1 4 4 3 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,029,939.12

தன நிதானய
தேதி 2023/08/22
சீட்டிழுப்பு இலக்கம் 1244
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,307,023.20
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 20 33 38 44
விஷேசட ஆங்கில எழுத்து O
Double Chance இலக்கம் 18099

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 523
சீட்டிழுப்பு திகதி 2023-08-22
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,914,334.80
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 02 26 48 62
விசேட இலக்கினம் கடகம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1562
22/08/2023
34070
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.405,068,948.00
ஆங்கில எழுத்து W
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 64 65 74 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# ரத்வத்தை தோட்ட சம்பவத்தில் ஜீவனின் வார்த்தைப் பிரயோகம் கண்டிக்கத்தக்கது

## பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தெரிவிப்பு

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் எல்கடுவ தோட்டத்துக்குச் சொந்தமான ரத்வத்த தோட்டத்தின் சிரேஷ்ட முகாமையாளரை தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (20) அச்சுறுத்தியுள்ளார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இந்த நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதோடு பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தவேண்டுமென இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

தோட்டத்தில் பணிபுரியாதவர்கள் சட்டவிரோதமாக கட்டடங்களை அமைத்ததால் தோட்ட நிர்வாகத்தினர் அதனை உடனடியாக அகற்ற வேண்டும் என்று கூறப்பட்டதைத் தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டது.

இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்த பின்னர் சட்டத்துக்கு அமைவாக காணியின் பாதுகாவலர்களாக அரச சொத்துகளைப் பாதுகாக்க நிர்வாகம் தமது அதிகாரத்தைப் பிரயோகித்தது. ரத்வத்தை தோட்டத்தின் காணி அரசாங்கத்துக்கு சொந்தமானதுடன், இதன் நிர்வகிப்பு ஒப்பந்தம் எல்கடுவ பெருந்தோட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட கைத்தொழில்துறையின் உச்ச அமைப்பு என்ற வகையில் அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரின் இத்தகைய வார்த்தைப் பிரயோகம் மற்றும் அச்சுறுத்தல் போன்ற செயல்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறான உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட தோட்டக் கம்பனிகளின் முகாமைத்துவத்தை நாட்டின் சட்டங்களுக்கு அமைவாக அனுமதிக்குமாறு அமைச்சரிடம் கோருகின்றோம் என பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலா விடுதியில் ஒருவர் சுட்டுக்கொலை

ராமு தனராஜா

ஹப்புத்தளை, பெரகல வீதியில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியொன்றில் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை(22) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மாத்தறை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் காயமடைந்தவர் விடுதி உரிமையாளர் எனவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தின் பின்புலம் தொடர்பில் உறுதியான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை எனவும் துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் தொடர்பிலும் எதுவும் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹனவின் பணிப்புரையின்பேரில் ஹப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரியின் மூன்றாம் மாடிக்கட்டிடத் திறப்புவிழா கல்லூரி அதிபர் பி.சிவக்குமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கட்டிடத்தை திறந்துவைத்தார்.

**படம்:** *கண்டி செய்தியாளர்*

# சப்ரகமுவ மாகாண ஆளுநர் தலைமையில் நடமாடும் சேவை







இரத்தினபுரி செய்தியாளர்

சப்ரகமுவ மாகாண மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக சப்ரகமுவ மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ பணி செவ்வாய்க்கிழமை (22) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு கேகாலை மாவட்ட வரக்காபொல தேர்தல் தொகுதியின் தோலங்கமுவ டட்லி சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது வரக்காபொல தேர்தல் தொகுதிக்குட்பட்ட பாடசாலைகள் மற்றும் அறநெறி பாடசாலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் நிதியுதவிகள் என்பன வழங்கப்பட்டன. அத்துடன், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் காணி உறுதிப்பத்திரங்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க, கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான உதயகாந்த குணதிலக்க, ராஜிகா விக்ரமசிங்க, சப்ரகமுவ மாகாண சபைத் தலைவர் காஞ்சன ஜயரத்ன, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்கா பிரேமதாச, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய உட்பட அரச அதிகாரிகள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## லொறி குடைசாய்ந்ததில் விபத்து: மூவர் படுகாயம்!



ராமு தனராஜா

ஹாலி-எல, உனுகொல்ல வீதியில் கெண்டர் ரக லொறியொன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்துச் சம்பவம் புதன்கிழமை (23) காலை இடம்பெற்றுள்ளது. லொறியில் பயணித்த மூவர் காயமடைந்த நிலையில் பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலி-எலயிலிருந்து உனுகொல்ல பிரதேசத்துக்கு பால் சேகரிப்பதற்காக சென்ற லொறியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. சாரதியால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதே விபத்துக்கான காரணம் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலி-எல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ருவான் குணதிலக்கவின் பணிப்புரையின்பேரில் போக்குவரத்துப் பிரிவினரால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஹாலி-எல பொலிஸார் தெரிவித்தனர்.

## வறட்சி காலநிலையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவு: விவசாயிகள் பாதிப்பு

எஸ்.கணேசன்

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் மலையகத்திலுள்ள நீர்த்தேக்கங்கள், ஆறுகள் மற்றும் குளங்களின் நீர்மட்டம் சடுதியாக குறைவடைந்து வருகின்றது. சில பகுதிகளில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன், விவசாய நடவடிக்கைகளுக்கு நீரைப் பெறுவதில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் வறட்சியால் தேயிலை விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கடும் சிரமத்துக்கு மத்தியிலேயே கொழுந்து கொய்து வருவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



வறட்சியான காலநிலையால் காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மேலும் குறைவடைந்துள்ளது. அத்துடன், மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கம் அமைக்கும்போது நீருக்குள் சங்கமமான பழைய மஸ்கெலியா நகரத்தின் இருப்பிடங்கள், புராதன கோயில், விகாரை, பாலங்கள் உட்பட பல்வேறுபட்ட ஞாபக சின்னங்கள் தற்போது வெளியில் காட்சியளிக்கின்றன.

இதேவேளை, பெருமளவானவர்கள் இதனை பார்வையிட்டும் வருகின்றனர். மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் மனித செயற்பாடுகளால் காட்டுத் தீ சம்பவங்களும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட நடனப் போட்டியில் கினிகத்தேனை கடவளை விக்னேஸ்வரா கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட நடனப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். இந்நடனப் போட்டி நிகழ்வை பயிற்றுவித்து தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியமைக்கு நடன ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. **படம்:** *கினிகத்தேனை செய்தியாளர்*



சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்துக்கு யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினரால் ஒரு தொகுதி உள்ளக விளையாட்டுப் பொருட்கள் செவ்வாய்க்கிழமை (22) வழங்கப்பட்டன. லயன்ஸ் கழக உறுப்பினர் சு.மயூரனின் தாயார் திருமதி தயாபரி சூரியகுமாரனின் பிறந்தநாளை முன்னிட்டு மேற்படி பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**படம்:** *சாவகச்சேரி செய்தியாளர்*

## பளையில் பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு



மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி பளை பிரதேச செயலகப் பிரிவு புதுக்காட்டு பகுதியில் தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்கு அருகிலுள்ள கிணற்றிலிருந்து பெருமளவு வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. செவ்வாய்க்கிழமை(22) பளை பிரதேச இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, RPG AP - 48, RPG AT- 12, 24, 60mm Para-11, M75-11, SFG87 - 4,Tape82-3 போன்ற வெடிபொருட்களே இராணுவத்தினரால் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

## காணாமலாக்கப்பட்டோர் உறவுகளை ஒன்றிணைத்து மன்னாரில் போராட்டம்

### அனைத்து தரப்பினரையும் எதிர்வரும் 30ஆம் திகதி கலந்துகொள்ளுமாறு அழைப்பு

மன்னார் நகர் செய்தியாளர்



வடக்கு, கிழக்கிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை ஒன்றிணைத்து எதிர்வரும் 30ஆம் திகதி மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்தில் அனைத்து தரப்பினரும் கலந்துகொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் புதன்கிழமை (23) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கோரி எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை காலை மன்னாரில் மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளோம். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை மன்னாரில் முன்னெடுக்கவுள்ளோம். இந்த ஆர்ப்பாட்டமானது மன்னார் சதொச மனிதப் புதைகுழிக்கு அருகாமையிலிருந்து ஆரம்பித்து பவனியாக மன்னார் நகர சபை பொது விளையாட்டு மைதானத்தை சென்றடையும்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடி 14 வருடங்களாக நீதிக்காக போராடும் தாய்மார்களின் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். தமிழ் தேசியத்தில் பணிபுரியும் தமிழ் தேசியத்தை நேசிக்கும் அனைவரும் எங்களுடன் கைகோர்க்க வேண்டும். ஐந்து வயது முதல் 70 வயது வரை உள்ள அனைத்துத் தரப்பினரையும் எங்களது ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், காணாமல்போன உறவுகளின் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் எமது பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ், நஷ்ட ஈடு வழங்க அரசாங்கம் முயல்கிறது. ஆனால், எமக்கு தேவையானது நீதியே. எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கேட்கின்றோம். அதனால்தான் இதுவரை இலங்கை அரசை நம்பவில்லை. இனியும் நம்பப் போவதில்லை. இவ்வாறானதொரு சம்பவம் இலங்கையில் நடைபெறவில்லை என்பதை உலகுக்குக் காட்டவே இந்த அரசாங்கம் உலகத் தரப்பினரின் மனதைக் கவரும் வகையில் சலுகைகளைக் கொடுக்கிறது.

அதேபோன்று ஓ.எம்.பி மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களை கொண்டுவந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளில் தாய்மார்களின் போராட்டத்தை மழுங்கடிக்க செய்ய நினைக்கிறது. எது எப்படி இருந்தாலும் எங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். எனவே, பல்கலைக்கழக மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என அனைவரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு எமது உறவுகளுக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும் - என்றார்.

# யாழ். கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக நெவில்குமார் தெரிவு

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் புதிய தலைவராக யோ.நெவில்குமார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

புதிய கலைப்பீட மாணவர் ஒன்றியத்தை அமைப்பதற்கான வேலைகள் பல்கலைக்கழக மாணவர் நலச்சேவைகள் கிளை ஊடாக முன்னெடுக்கப்படுமென தெரியவருகிறது. இந்நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்துக்கு புதிய தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களை தெரிவுசெய்யும் தேர்தல் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை (22) நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய வேட்பாளர்களாக த.டிசான், ஜெ.ஜெயகரன், யோ.நெவில்குமார் ஆகிய மூவர் போட்டியிட்டனர்.



இந்நிலையில், யோ.நெவில்குமார் 206 வாக்குகளையும், ஜெ.ஜெயகரன் 151 வாக்குகளையும், த.டிசான் 96 வாக்குகளையும் பெற்றனர். 206 வாக்குகளைப் பெற்ற யோ.நெவில்குமார் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக சில்வஸ்ரார் ஜெல்சின் 2022 ஜூன் மாதம் தெரிவுசெய்யப்பட்டு இதுவரை காலமும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பீடங்களின் ஒன்றியங்கள் தெரிவான பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான மாணவர் ஒன்றியம் அமைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com


## காய்ச்சலால் பீடிக்கப்பட்ட கைக்குழந்தை உயிரிழப்பு

யாழ்.செய்தியாளர்

ஐந்து நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த பிறந்து எட்டே நாட்களான கைக்குழந்தை ஒன்று, சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை (22) உயிரிழந்துள்ளது. யாழ்ப்பாணம் நயினாதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த குழந்தை பிறந்து மூன்று நாட்களான நிலையில் தொடர்ந்து காய்ச்சலால் பிடிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, 19ஆம் திகதி நயினாதீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டநிலையில், மேலதிக சிகிச்சைக்காக அன்றைய தினமே யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், செவ்வாய்க்கிழமை குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

# நிலவில் தடம் பதித்தது சந்திரயான் -3



## வரலாற்றுச் சாதனை படைத்தது இந்தியா

### "இது ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கு கிடைத்த வெற்றி; நிலவுக்கு மனிதனை அனுப்புவதே எமது அடுத்தத் திட்டம்"






### இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்

நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ அனுப்பிய சந்திரயான் -3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் திட்டமிட்டப்படி நேற்று (23) மாலை 6.02 மணியளவில் வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது.

இந்த வெற்றியின்மூலம் நிலவின் தென்துருவத்தில் தடம்பதிக்கும் முதல் நாடு என்ற பெருமையை எமது அயல்நாடான இந்தியா பெற்றுள்ளது. அத்துடன் இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் விண்வெளி ஆய்வில் வரலாற்றுச் சாதனைப் படைத்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகள் நிலவுக்கு விண்கலன் அனுப்பியதில் தோல்வியை தழுவிய நிலையில், இந்தியாவின் சந்திரயான் -3 விண்கலம் நிலவில் தரையிறங்கி சாதனை படைத்துள்ளது.

**திட்டம் வெற்றி - இஸ்ரோ**

இதனையடுத்து சந்திரயான் -3 திட்டம் வெற்றி பெற்றதாக இஸ்ரோ தலைவர் சோம்நாத் அறிவித்தார். இதனைத்தொடர்ந்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கோஷமிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். ஒருவரையொருவர் ஆரத்தழுவி மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டனர்.

**மனிதகுலத்துக்கான வெற்றி - நரேந்திர மோடி**

இந்நிலையில் ''நிலவில் சந்திரயான் -3 வெற்றிகரமாக தரையிறங்கியது, மனித குலத்துக்கு கிடைத்த மாபெரும் வெற்றி'' என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மேலும் ''சந்திரயான் -3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக நிலவில் தரையிறக்கிய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகள். இந்தியாவை நினைத்து உலக நாடுகள் பெருமைகொள்ளும் தருணம் உருவாகியுள்ளது.

சந்திரயான் -3 விண்கலன் வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கு கிடைத்த வெற்றி. நிலவுக்கு மனிதனை அனுப்புவதுதான் நமது அடுத்தக்கட்ட திட்டம்.

சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா எல் -1 விண்கலம் விரைவில் அனுப்பப்படும்'' எனத் தெரிவித்துள்ளார்.

பூமியின் துணைக் கோளான நிலவை இதுவரை, சந்திரயான்-1, சந்திரயான்-2 ஆகிய இரண்டு விண்கலங்களை அனுப்பி இந்தியா ஆய்வு செய்துள்ளது. இதன் மூலம் நிலவில் தண்ணீர் இருப்பதை இந்தியா கண்டுபிடித்தது. இந்நிலையில் நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்ய கடந்த ஜூலை 14ஆம் திகதி சந்திரயான்-3 விண்கலத்தை அனுப்பியது இஸ்ரோ.

நிலவின் தென் துருவப்பகுதியை ஆய்வு செய்வதற்காக, சந்திரயான் - 3 விண்கலம், ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி தளத்திலிருந்து கடந்த மாதம் 14ஆம் திகதி வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இதன் செயற்பாடுகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

இந்த விண்கலம் மூன்று பிரிவுகளை கொண்டதாகும். புரபல்ஷன் மாட்யூல் எனப்படும் உந்து கலன், லேண்டர் எனப்படும் நிலவில் தரையிறங்கும் சாதனம், ரோவர் எனப்படும் நிலவில் ஆய்வு செய்யும் வாகனம் அடங்கியதே சந்திரயான் - 3 விண்கலமாகும்.

இதில் உந்து கலனுக்குள் லேண்டர் சாதனமும் லேண்டர் சாதனத்துக்குள் ரோவர் வாகனமும் இடம்பெற்றுள்ளன.

பூமியின் சுற்று வட்டப் பாதையிலிருந்து, கடந்த 5ஆம் திகதி நிலவின் சுற்று வட்டப் பாதைக்கு சந்திரயான் - 3 விண்கலம் செலுத்தப்பட்டது.

சந்திரயான் - 3 விண்கலத்திலுள்ள, புரபல்ஷன் மாட்யூல் எனப்படும் உந்து கலத்திலிருந்து, நிலவில் தரையிறங்கவுள்ள விக்ரம் லேண்டர் சாதனம் கடந்த 17ஆம் திகதி பிரிந்து நிலவின் சுற்றுப்பாதையில் சுற்றி வந்தது.

இந்நிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு ஏவப்பட்ட சந்திரயான் - 2 ஆர்பிட்டர் இப்போதும் நிலவின் சுற்றுவட்ட பாதையில் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. இது ஏழு ஆண்டுகள் செயற்படும் திறன் உடையது. இந்த சந்திரயான் - 2 ஆர்பிட்டர் மற்றும் சந்திரயான் - 3 லேண்டர் சாதனம் இடையே இருவழி தகவல் தொடர்பு திங்கட்கிழமை வெற்றிகரமாக நிறுவப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்தது.

இந்நிலையில் சந்திரயான் -3 விண்கலம் கடந்த 39 நாட்கள் பயணித்து 40ஆவது நாளான நேற்று நிலவை எட்டியது. முதலில் புவி வட்டப்பாதையில் சுற்றிய சந்திரயான்-3 விக்ரம் லேண்டர் அதன்பின் நிலவின் வட்டப்பாதையில் சுற்றி கட்டங்கட்டமாக உயரம் குறைக்கப்பட்டது.

இதையடுத்து, நேற்று மாலை 5.45 மணிக்கு இதன் உயரம் குறைக்கப்பட்டது. லேண்டர் மாடுல் நிலவை நோக்கி இறக்கப்பட்டது. 30 கி.மீ. உயரத்திலிருந்து லேண்டர் தரையிறக்கப்பட்டது. 11.5 நிமிடத்தில் விக்ரம் லேண்டர் 7.4 கிமீ உயரம் வரை கொண்டு வரப்பட்டது. 1.68km கிமீ / நொடி என்ற வேகத்தில் இந்த லேண்டர் களமிறங்கியது. அதன்பின் இதன் வேகம் குறைக்கப்பட்டு கடைசி 10 மீற்றர் வரை கொண்டு செல்லப்பட்டது.

அதன்பின் திரஸ்டர்கள் உதவியுடன் இதன் உயரம் மற்றும் வேகம் குறைக்கப்பட்டு ஏ.எல்.எஸ். மூலம் ஆட்டோமேட்டிக் லேண்டிங் சிஸ்டம் மூலம் விக்ரம் லேண்டர் தரையிறக்கப்பட்டது.

நிலவில் ஒரு பகல் பொழுது 14 பூமி நாட்கள் என்பதால், அங்கு சூரிய வெளிச்சம் கிடைக்கும் நேரத்தில் தரையிறங்கினால் மட்டுமே திட்டமிட்டபடி ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். அதன்படி நிலவில் சூரிய உதயம் தொடங்கும் நேரத்தை கணக்கிட்டு, சந்திரயான் -3இன் விக்ரம் லேண்டர் நேற்று மாலை 6.02 மணியளவில் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது. இந்த வெற்றியின் மூலம் விண்வெளி ஆய்வில் வரலாற்று சாதனைப் படைத்த இந்தியா அனைத்துல நாடுகளையும் தம் பக்கம் ஈர்த்துக்கொண்டுள்ளது.

# உரிய முறைமையின்றி SVAT வசதியை அகற்றினால் ஏற்றுமதி துறையின் வீழ்ச்சியை தவிர்க்க முடியாது

## ஏற்றுமதி துறையினர் ஒரே குரலில் துறைசார் மேற்பார்வைக் குழுவில் அறிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவின் படி, அரசாங்கத்தினால் செயல்படுத்தப்படவுள்ள SVAT வசதியை நீக்குவதானால், முதலில் VAT வரியை மீளப் பெறுவதற்கான வினைத்திறனான பொறிமுறையை அறிமுகப்படுத்த வேண்டும் என ஏற்றுமதி துறையினரின் அனைத்து சங்கங்களும் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தனித்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அறிவித்தனர்.

இந்தக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தலைமையில் திங்கட்கிழமை(21) கூடியதுடன், இந்நாட்டின் ஏற்றுமதி கைத்தொழிற்றுறையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒன்றிணைந்த ஆடை உற்பத்தியாளர்களின் சங்கம், இறப்பர் தயாரிப்பு ஏற்றுமதியாளர்கள் சங்கம், தேயிலை தயாரிப்பு ஏற்றுமதியாளர்கள் சங்கம் உள்ளிட்ட அனைத்து முக்கிய ஏற்றுமதியாளர்களின் சங்கங்களின் பிரதிநிதிகள், நிதி அமைச்சு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதன்போது SVAT வசதியை நீக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் செயற்படுத்தப்படும் வரி முறையைப் போன்ற வெற்றிகரமான வரி முறையை நடைமுறைப்படுத்த இந்தத் தீர்மானத்தை எடுக்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சின் அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

எனினும், SVAT வசதியை நீக்குவது தொடர்பில் எதிர்ப்பு இல்லாவிட்டாலும், உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று இந்த நாட்டிலும் முதலில் முறையான பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும் என ஏற்றுமதியாளர் சங்கங்கள் சுட்டிக்காட்டின. VAT திரும்பச் செலுத்துவதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொள்ளப்படுவதால், இது ஏற்றுமதியாளர்களின் பணப்புழக்கத்தை (cash flow) நேரடியாகப் பாதிக்கிறது என்றும் RAMIS அமைப்பு 2016 இல் நிறுவப்பட்டு பல பில்லியன்களை செலவழித்த 7 ஆண்டுகளுக்குப் பிறகும், வரி அறவிடுவது மற்றும் மீளச் செலுத்துவதற்கு வினைத்திறனான அமைப்பொன்று ஸ்தாபிக்கப்படாமை சிக்கலானது எனக் கலந்துரையாடப்பட்டது.

சட்டத்துக்கமைய 45 நாட்களுக்குள் வரி மீளச் செலுத்துதல் இடம்பெறவேண்டும் என்றாலும் அது அவ்வாறில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட்டது. அதனால் வரியை விரைவாக திருப்பிச் செலுத்தும் தரகர்களாக அதிகாரிகள் உள்ளிட்ட சில மூன்றாம் தரப்புக் குழுக்கள் செயல்படும் அளவுக்கு ஊழல் சூழ்நிலைகள் உருவாகியுள்ளதாக இந்த சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

SVAT வசதியைநீக்குவது சம்பந்தப்பட்டஅமைச்சரவைத் தீர்மானத்துக்கமைய, இந்த வசதியை நீக்குவதானால், அதற்கு முன்னர் சரியான முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என அறிவித்துள்ளதாக இதன்போது புலப்பட்டது.

SVAT மூலம் அரசுக்கு வருமானம் இழக்கப்படுவதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டாலும், அதனை சரியாக உறுதிப்படுத்துவதற்கு தேவையான புள்ளிவிபரங்கள் முன்வைக்கப்படாமை சிக்கலுக்குரியது எனக் குழு சுட்டிக்காட்டியது. அதனால் இது தொடர்பான அறிக்கையை ஒரு வாரத்துக்குள் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு குழுவின் தலைவர் வலேபொட அறிவித்தார். அத்துடன், SVAT வசதியை அகற்றுவதாயின் VAT வரையை மீளச் செலுத்துவதற்கான மாற்று வேலைத்திட்டம் எது என்பதைத் தெளிவாக முன்வைக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கினார்.

அத்துடன், இதனால் ஏற்றுமதி துறைக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பில் ஒரு வாரத்துக்குள் அனைத்துத் தரவுகளுடன் முழுமையான அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு ஏற்றுமதி தொழில்துறையினருக்கு அவர் அறிவித்தார். நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பங்காற்றும் ஏற்றுமதி கைத்தொழில்களை பாதுகாப்பது ஒரு தேசிய பொறுப்பு எனவும் அதற்காக இந்த துறைசார் மேற்பார்வைக் குழு தொடர்ந்து முன்னிற்கும் எனவும் குழுவின் தலைவர் வலியுறுத்தினார். இந்த அனைத்து விடயங்களுக்கும் அமைய இது தொடர்பான பரிந்துரைகளை பாராளுமன்றத்தின் ஊடாக அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாக குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## இளம்பெண்ணை கொன்ற சந்தேகநபர் சிறையில் தற்கொலை

அங்குருவாதொட்ட, உருதுதாவ பிரதேசத்தில் இளம் தாய் மற்றும் பதினொரு மாத பெண் குழந்தையை கொலை செய்த குற்றச்சாட்டில் களுத்துறை மல்வத்தை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ சிப்பாயின் சடலம் நேற்றுமுன்தினம் (22) பிற்பகல் அங்கு தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

வரகாகொட சல்கஸ்வத்த மாவத்தை பிரதேசத்தில் வசிக்கும் ஏ.ஏ.டி.பிரியன் மதுரங்க என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் அங்குருவாதொட்ட உருதுதாவ பிரதேசத்தில் வசிக்கின்றார். 24 வயதான வாசனா குமாரி மற்றும் 11 மாத பெண் குழந்தை தஸ்மி திலன்யா ஆகியோரின் படுகொலை தொடர்பில் அங்குருவாதொட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த வாசனாகுமாரியின் கணவரின் சகோதரியின் கணவரான இவர், இராணுவத்திலிருந்து விலகி முச்சக்கரவண்டி சாரதியாக பணிபுரிகிறார். வாசனாகுமாரியில் ஏற்பட்ட மயக்கத்தில், அவரை தொல்லைப்படுத்தி வந்த நிலையில், இந்த கொலை நடந்தது.

தற்கொலை செய்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக களுத்துறை போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

களுத்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹொரணையில் சிறுவர் சந்தை



ஹொரணை தமிழ் மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

தரம் 1 முதல் 5 வரை இலங்கை பாடத்திட்டத்துக்கமைவாக சுற்றாடல் பாடத்திலுள்ள 'நாமும் சந்தையும்' எனும் பாடத்தை அடிப்படையாகக்கொண்டு அதனை மாணவர்களுக்கு செய்முறை மூலமாக செயற்படுத்தி பயிற்சி அளிக்கும் முகமாக இந்த சிறுவர் சந்தை நடத்தப்பட்டது.



ஹொரணை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் அருள்தாசன் மற்றும் அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்களான ரவிச்சந்திரன் விஜயகுமார், சந்துரு, அஜித், வசந்தகுமார் ஆகியோரின் பூரண ஆதரவுடனும் பாடசாலை ஆசிரியர்களின் ஒருங்கமைப்பிலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் பெருந்திரளான பிரதேச மக்கள் கலந்து கொண்டு சிறுவர் சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்தார்கள்.

ஹொரணை வலய தமிழ் பாடசாலைகளின் வரலாற்றில் முதல் முறையாக இந்த சிறுவர் சந்தையில் பங்குபற்றிய மாணவர்கள் தமிழர் கலாசார உடை அணிந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தது பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்திருந்தது. தமிழர் கலாசார விடயத்தில் அக்கறை கொண்டு முதன் முறையாக அதனை செயற்படுத்தியவர் பாடசாலை அதிபர் நமசிவாயம் என்பது குறிப்பிடத்தக்கது. படத்தில் சிறுவர் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் சிறுவர்களையும் மற்றும் பாடசாலை அதிபர் ஆசிரியர்களையும் காணலாம்.

படங்கள்: மணி ஸ்ரீகாந்தன்

# நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை- நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிறந்தநாள் கொண்டாடுவதற்குச் சென்ற நபரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் (22) பதிவாகியுள்ளது.

திருகோணமலை- திருஞானசம்பந்தர் வீதியில் வசித்து வந்த கனகரத்னம் சிவக்குமார் (53வயது) என்பவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக நிலாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.



பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு சாம்பல்தீவு கடற்கரைக்கு ஆறு பேர் கொண்ட குழுவினர் சென்றதாகவும் அதில் மூவர் குளித்துக் கொண்டிருந்தபோது ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் இதனையடுத்து பொலிஸார் மற்றும் இளைஞர்களின் உதவியுடன் குறித்த நபர் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஊடகவியலாளர்களைத் தடுத்துவைக்க பௌத்த பிக்குவுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் கேள்வி

இலங்கையில் உள்ள பௌத்த துறவிகள் சிலரின் அடாவடித்தனம் இனமுறுகலுக்கு தூபம் இடுகின்றது. இதனை உடனடியாக அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையெனில் மீண்டும் 1983, ஜூலை கலவரம் போன்ற நிலைமை ஏற்பட வாய்ப்புள்ளது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம், மயிலத்தமடு மேய்ச்சல் தரையை பார்வையிடச் சென்ற ஊடகவியலாளர்கள் உட்பட சர்வமதத் தலைவர்கள் அடங்கிய குழுவினரை புத்த பிக்கு உட்பட சிங்கள குண்டர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் தடுத்து வைத்தமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், ஊடகவியலாளர்களுக்கு நாட்டில் எந்த இடத்திலும் - எவருடன் சென்றும் தமது ஊடகப்பணியைச் செய்யும் உரிமை உண்டு. அதுபோலவே சர்வமதத் தலைவர்களுக்கும் நாட்டில் சமாதானத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்த பிரச்சினைகள் உள்ள இடங்களுக்குச் சென்று சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கான உரிமை உண்டு.



ஆனால், இவ்வாறான மனிதநேயம் கொண்ட மதத் தலைவர்களையும் அவர்களுடன் செய்தி சேகரிக்கச்சென்ற மட்டக்களப்பு ஊடகவியலாளர்களையும் வழி மறித்து தடுத்து வைக்க புத்த பிக்குக்கு இந்த அதிகாரத்தை வழங்கியவர் யார்?

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல்தரையில் அத்துமீறி குடியேற்றம் செய்யும் அராஜகத்தை தட்டிக்கேட்கவும் அதனைத் தடுக்குமாறும் பல வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலதரப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தும் அதனை முன்பிருந்த ஜனாதிபதிகளோ தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதன் உண்மை நிலையை நேரடியாகச் சென்று பார்வையிடவே நேற்றுமுன்தினம் சர்வமதத் தலைவர்கள், பண்ணையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அப்பகுதிக்குச் சென்றிருந்தனர். இந்நிலையில், அவர்களை வழிமறித்து ஒரு பௌத்த துறவி குண்டர்களை கூட்டிவைத்து தடுத்துவைத்த காட்டுமிராண்டிச்செயலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அதேவேளை, இவ்வாறான ஈனச்செயல்கள் தொடருமானால் ஓர் இனக்கலவரத்தை தூண்டும் இவ்வாறான பௌத்த துறவிகளை நீதிமன்றில் நிறுத்தி தண்டனை வழங்கவேண்டும். சர்வதேச சமூகம் போர் முடிந்து 14 வருடங்கள் கடந்தும் இலங்கையில் மீண்டும் இனக்கலவரத்தைத் தூண்டும் பின்னணியில் உள்ள அரசியல் வாதிகளை இனங்காண வேண்டும் எனவும் கூறினார்.

# களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் பழத்தோட்டம் அமைத்தல்





மட்டக்களப்பு

மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மரநடுகை திட்டத்தின் கீழ் பழத் தோட்டம் அமைக்கும் நிகழ்வு நேற்றுமுன்திம் (22) பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் குருக்கள்மடம் அசீசி சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ் பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ப. ராஜதிலகன் மற்றும் விதாதா வள நிலைய வெளிக்கள இணைப்பாளர் வ. பிரசாந்த் ஆகியோரினால் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது மா, தோடை, மாதுளை, கொய்யா போன்ற பழக்கன்றுகள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மலராஜ், அருட்சகோதரர் ஜெகன், அருட்தந்தை அம்றோஸ், நன்னிலம் சமூக நிறுவனத்தின் உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் இல்ல மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

# மாடு திருட்டு: பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்

கனகராசா சரவணன்

மாடொன்றை திருடிய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய பொலிஸ்கான்ஸ்டபிள் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடு ஒன்றைத் திருடிய குற்றச்சாட்டில் கடந்த 20 ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்நிலையில், சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டிருந்த நிலையில், திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அவரைப் பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார்.



*நிந்தவூர் அல் - அஷ்றக் தேசிய பாடசாலையின் பெண்கள் பிரிவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கிணங்க "றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட்" அமைப்பினால் அறிவித்தல் பலகையொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.*

*இது தொடர்பான நிகழ்வு கல்லூரி அதிபர் எம்.அப்துல் கபூர் தலைமையில் நேற்று முன் தினம்(22)இடம்பெற்றது.*

படம்: கோணாவத்தை செய்தியாளர்

# தோணா வாவியை துப்புரவு செய்யுமாறு மக்கள் கோரிக்கை



நிந்தவூர் செய்தியாளர்

சாய்ந்தமருது, முகத்துவாரத்தில் கலக்கும் தோணா வாவியில் ஆற்றுவாழைகள் வளர்ந்து காணப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் இடம் பெற்று வருவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தோணா வாவியில் ஆற்றுவாழைகள் படர்ந்துள்ளதால் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதுடன் தொற்று நோய்களும் பரவலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

பகலிலும் இரவிலும் துர்நாற்றம் வீசுவதுடன் விஷ ஜந்துக்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

எனவே, தோணாவை துப்புரவு செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துமாறும் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஆலிம் நகர் கிராம மக்களுக்கு ஆடுகள்



கோணாவத்தை செய்தியாளர்

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆலிம் நகர் கிராமத்தில் வறிய குடும்பங்களுக்கு ஆடுகள் கையளிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார் தலைமையில் நேற்று முன்தினம்(22)நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல். ஆகிர், கால்நடை வைத்திய அதிகாரிகளான றிப்கான், சஜீனா, கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ .சஹர்பான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எல். தையூப், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# செங்கலடி பிரதேச செயலகம் நடத்திய இரத்ததான நிகழ்வு



மட்டக்களப்பு

ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு பிரதேச செயலாளர் கோ. தனபாலசுந்தரம் தலைமையில் நேற்று (23) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் எனும் தொனிப் பொருளில் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெற்று வரும் இவ்விரத்ததான நிகழ்வினூடாக அப்பிரதேச மக்களின் நலனுக்காக பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விளையாட்டுக் கழக வீரர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என பலரும் உதிரக் கொடை கொடுக்கும் சமூகப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதேச செயலாளர் தனபாலசுந்தரத்தின் ஆலோசனை வழிகாட்டலின் கீழ் உதவிப் பிரதேச செயலாளர் நிருபா பிருந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆ. சுதாகரன் ஆகியோரின் ஏற்பாட்டில் இவ்விரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி



தலைமையிலான தாதியர் குழு உதிரம் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்கள், ஏறாவூர் நகர இளைஞர்கள் எனப் பலர் ஆர்வத்தோடு கலந்துகொண்டு இரத்தம் தானம் செய்தனர்.

இந்நிகழ்வை ஊக்குவிக்கும் விதமாக "அகம்" இளைஞர் அபிவிருத்தி அமைப்பினால் இரத்த தானம் செய்த கொடையாளிகளுக்கு நினைவுச் சின்னமாக மாமரக்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இணையவழி குற்றங்களைத் தடுக்க மட்டக்களப்பில் விழிப்புணர்வு ஊர்வலம்




மட்டக்களப்பு

நாட்டில் அதிகரித்துவரும் இணையவழி குற்றங்கள், வன்முறைகளைத் தடுக்கும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பில் நேற்று (23) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி மயூரி ஜனன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழிப்புணர்வு ஊர்வலம், கல்லடி பாலத்திலிருந்து ஆரம்பமாகி காந்தி பூங்காவில் நிறைவு பெற்றது. மேலும் மக்கள் அதிகம் ஒன்றுகூடும் இடமான காந்திப்பூங்கா வளாகத்தில் இணையவழிக் குற்றங்களைத் தடுக்கும் விபரங்கள் அடங்கிய பதாகையும் நிறுவப்பட்டது.

தற்போது நாட்டில் மிகவும் அதிகரித்து வரும் இணைய வழி வன்முறை தொடர்பாக இளைஞர் - யுவதிகளுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வுகளும் அருவி பெண்கள் வலையமைப்பினால் நடத்தப்பட்டு வருகின்றது.




இதனடிப்படையில் முதற்கட்டமாக 60 இளைஞர்களுக்கான இணைய பாதுகாப்பு பயிற்சிநெறி வழங்கப்பட்டுள்ளதுடன் இணைய வழி குற்றங்களில் இருந்து பாதுகாப்பாகவும் விழிப்புணர்வாகவும் இருப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் இம்மாபெரும் வீதியோர விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வூர்வலத்தில் இளைஞர் - யுவதிகள், பெண்கள் என பலர் கலந்துகொண்டனர். இணையவழிக் குற்றங்களைத் தடுக்கும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகள், விழிப்புணர்வு சமிக்ஞைகள், விழிப்புணர்வு காட்சிப்படுத்தப்பட்ட ஊர்தி என்பன இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டக்களப்பில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திக்கான 'பேங்கிங் கிளினிக்'





மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் 'பேங்கிங் கிளினிக்' (Banking Clinic) நிகழ்வு நேற்று (23) மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முயற்சியாளர்களுக்கு கடன் தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் நோக்கத்துடன் அரச தனியார் வங்கிகள் மற்றும் ஏனைய தொழில் பயிற்சிக்கான நிறுவனங்கள் பங்கேற்று தொழில் முயற்சியாளர்களையும் வங்கிகளையும் இணைத்து தொழில் முயற்சிக்கான கடன்கள் வழங்கப்பட்டன.

இதில் நூற்றுக்கும் அதிகமான முயற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

# பெண்கள் வலையமைப்புக்கிடையிலான அனுபவப் பகிர்வும் கலந்துரையாடலும்





மட்டக்களப்பு

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் பெண்கள் வலையமைப்புகளுக்கிடையிலான அனுபவப் பகிர்வும் கலந்துரையாடலும் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (23) இடம்பெற்றது. இந்நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின்கீழ் மாவட்ட உதவிச் செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இரு மாவட்டங்களினதும் மகளிர் வலையமைப்புகள் சமூக, ஜீவனோபாயத்தின் போது ஏற்படும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14, திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட பெண்கள் சம்மேளன உறுப்பினர்கள் இதில் அனுபவங்களை முன்வைத்தனர்.

பெண்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்து, கிராம மட்டத்திலிருந்து அப்பெண்களை வலுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமையையும் பாலியல் வன்முறையை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், உலவள ஆற்றுப்படுத்தல், இலவச சட்ட ஆலோசனை வழங்கல் போன்றவை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.அருனாழினி, திருகோணமலை மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எ.எம்.சுவர்ண தீபானி அபேசேகர, இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலிப்குமார் மற்றும் மகளிர் அமைப்புகளின் தலைவர்கள், செயலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஹெரோயின் வைத்திருந்தவர் பொலிஸாரால் கைது

அப்துல்சலாம் யாசீம்

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் திருகோணமலை, மஹதிவுல்வெவ குளத்துக்கு அருகில் சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

eZ Cash மூலம் பணத்தைச் செலுத்திய பின்னர் குறித்த நபர் இளைஞர்களுக்கு போதைப் பொருளை விநியோகம் செய்து வருவதாக மொரவெவ பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து திருகோணமலை, மஹதிவுல்வெவ குளத்து பகுதிக்கு விரைந்த பொலிஸார் குறித்த சந்தேக நபரை சோதனை செய்தபோது அவரிடம் நான்கு ஹெரோயின் போதைப்பொருள் பக்கெட்டுகள் இருந்துள்ளன. இதனையடுத்து குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை, வில்கம் விகாரை வீதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கிழக்கில் காணி, நிர்வாகம், நிதி, பொலிஸ் அதிகாரம் தொடர்பாக தமிழ், முஸ்லிம், சிங்கள எம்.பிக்கள் கூடிப்பேச வட்டமேசை மாநாடு

## ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த முன்மொழிவில் முஷாரப் எம்.பி. வேண்டுகோள்

சாய்ந்தமருது செய்தியாளர்



கிழக்கு மாகாணத்தில் காணி விநியோகம், அரச நிர்வாகம், நிதி மற்றும் பொலிஸ் அதிகாரம் தொடர்பாக கலந்துரையாடி, தீர்வுகளை எட்டுவதற்காக இம்மாகாணத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே வட்டமேசை மாநாடு ஏற்பாடுசெய்யப்பட்டு, அர்த்தமுள்ள கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும் என்று திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கிடையே பரஸ்பரம் புரிந்துணர்வு, நம்பிக்கை ஏற்படாதவரை 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத் துவது சாத்தியமில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்துள்ள அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான தனது முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையிலேயே அவர் இவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப்பகிர்வை முன்னிறுத்தியே அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டுமாயின் அனைத்து சமூகத்தினரும் விட்டுக்கொடுப்புகளுடன் அர்ப்பணிப்புகளை செய்வதற்கு தயாராக வேண்டும்.

இன சமத்துவமும் தனிநபர் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மாகாண அரச நிர்வாக செயற்பாடுகளில் அனைத்து சமூகங்களினதும் வகிபாகங்கள் உறுதிசெய்யப்பட வேண்டும்.

இனங்களுக்கிடையே புரிந்துணர்வின்மை, சந்தேகம், அவநம்பிக்கை மேலோங்கியிருக்கின்ற சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அனைத்து மத, சமூக குழுக்களிடையேயும் பரஸ்பரம் புரிந்துணர்வு, நம்பிக்கை மற்றும் ஒற்றுமை கட்டியெழுப்பப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமானது அர்த்தமுள்ள வகையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின் முதலில் இவ்வாறான அடிப்படை விடயங்கள் நிறைவு செய்யப்படுவது அவசியமாகும் எனவும் தனது முன்மொழிவின் ஊடாக ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளார்.

# கிழக்கில் மூடப்பட்ட லங்கா சதொச கிளைகள் மீளத் திறக்கப்படுமா?

அனார்க்கலி

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் லங்கா சதொச கிளைகள் பல மூடப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் கடும் அநீதிக்கு ஆளாகியுள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகம் இருந்தபோதிலும் சதொச மூலம் அத்தியாவசிய உணவுப்பொருட்களை மானிய விலையில் வழங்குவது நடைமுறைப் படுத்தப்பட்டதாகவும் ஆனால், பல சதொச கிளைகள் கிழக்கில் மூடப்பட்டதால் மக்கள் அந்த நன்மைகளை இழந்துள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மக்களின் அன்றாட தேவையான அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அடிக்கடி குறைக்கும் அறிவிப்பை செய்து வரும் அரசாங்கம், அத்தியாவசியப் பொருட்களை லங்கா சதொச மூலம் பெற்றுக்கொள்ளலாமென்பதை தெரிவித்து வருகின்றது.

இந்த வாய்ப்பை நாட்டின் ஏனைய மாகாணங்களிலுமுள்ள மக்கள் பயன்படுத்தி வருகின்ற நிலையில், கிழக்கு மாகாணத்தின் பல தமிழ், முஸ்லிம் பிரதேச மக்கள் இத்தகைய நலனை அனுபவிக்க முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

கிழக்கின் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் இயங்கிவந்த பல லங்கா சதொச கிளைகள் நஷ்டம் என்ற போர்வையில் அரசியல் பழிவாங்கலாக ஒரே தடவையில் இழுத்து மூடப்பட்ட கண்மூடித்தனமான செயற்பாடுகளே மேற்படி நிலைக்குக் காரணமாகும்.

நல்லாட்சி காலப்பகுதியில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இயங்கிய பல சதொச கிளைகள் (சுமார் 15 கிளைகள்) கோட்டாபய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் மூடப்பட்டன.

சுமார் 15 வருடங்களுக்கு மேல் அம்பாறை மாவட்டம் நிந்தவூரில் இயங்கிவந்த லங்கா சதொச கிளையும் இதன்போது மூடப்பட்டமை கவலைக்குரிய விடயமாகும்.

2020 பெப்ரவரி மாதம் 29ஆம் திகதியுடன் குறித்த கிளைகளின் கையிருப்பைக் கணக்கில் எடுக்குமாறு பணித்த லங்கா சதொச தலைமையகம், அதிரடியாக மறு நாளுடன் வியாபார நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளுமாறு பணித்து கிளைகளை இழுத்து மூடியது. ஆனால், அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறு மூடப்பட்ட பெரும்பான்மை இன மக்கள் வாழும் பிரதேச கிளைகள் (சுமார் மூன்று) ஒரு மாத காலத்துக்குள் மீளவும் திறக்கப்பட்ட புதுமையும் நிகழ்ந்தது. மூடப் பட்ட கிளைகளில் பணியாற்றிய தமிழ் பேசும் பணியாளர்கள் பலரும் இந்த நடவடிக்கையால் பாதிக்கப்பட்டனர்.

எத்தனையோ அரச நிறுவனங்கள் நஷ்டத் தில் இயங்கியபோதும் மக்களுக்கான சேவையைத் தொடர்ந்தும் அவை செய்து வருகின்றன. உதாரணமாக, பெற்றோலியத் துறையைக் குறிப்பிடலாம். அரச நிறுவனங்கள் யாவும் இலாப நோக்கத்துடன் மட்டுமே இயக்கப்படுவதில்லை.

அவ்வாறு நோக்கும்போது கிழக்கின் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் இயங்கிய லங்கா சதொச கிளைகள் மூடப்பட்டதை பழிவாங்கல் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது?

எனவே, அம்பாறை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள நிந்தவூர், அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது சதொச கிளைகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை போன்ற கிளைகளும் திருகோணமலை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள மூதூர், புல்மோட்டை, முள்ளிப்பொத்தானை கிளைகளும் மீளவும் திறக்கப்பட்டு மக்களுக்குப் பயனளிக்க லங்கா சதொச தலைமையகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர்.

கோட்டாபய அரச இரசாயன பசளையை தடைசெய்து சேதனப் பசளை என்ற திட்டத்தைக் கொண்டுவந்து விவசாயத் துறையை நாசமாக்கி நாட்டின் பொருளாதாரத்தை குட்டிச்சுவராக்கிய படுபாதக செயலைப் போன்றே மேற்படி சதொச கிளைகளையும் மூடி பாமர மக்களின் வயிற்றில் அடித்த செயலுக்கு இன்றைய அரசு உடனடித் தீர்வு வழங்க முன்வருமா எனவும் இதற்கான அழுத்தத்தை கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் கொடுக்க முன்வருவார்களா எனவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி மட்டக்களப்பில் போராட்டம்





மட்டக்களப்பு நிருபர்

பெரும்பான்மை இனத்தவர்களாலும் பௌத்த பிக்குவாலும் தடுத்துவைக்கப்பட்ட 3 தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு நீதிகோரி மட்டு. நகரில் சக ஊடகவியலாளர்களால் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் முகமாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை (22) அப்பகுதிக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்த சர்வமதத் தலைவர்கள், சிவில் அமைப்பினர் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட குழுவினரை அங்கு அத்துமீறி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பெரும்பான்மையினத்தவர்களும் அங்கிருந்த பௌத்த மதகுரு ஒருவரும் தடுத்துவைத்து அச்சுறுத்தியுள்ளனர். இவ்விடயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியும் மட்டக்களப்பு ஊடகவியலாளர்களால் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை(22) மாலை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபிக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மயிலத்தமடு பிரதேசத்தில் பண்ணையாளர்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரை தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை கேட்டறிவதற்காகவே செவ்வாய்க்கிழமை குறித்த குழுவினர் களவிஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், பண்ணையாளர்களுடன் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டதன் பின்னர் திரும்பிச் செல்லும்போது அப்பகுதியில் சட்டவிரோதமாக காணிகளை ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருப்பவர்களும் அங்கிருந்த பௌத்த மதகுரு ஒருவரும் இணைந்து இக்குழுவினரை வழிமறித்துள்ளனர்.

பின்னர் ஊடகவியலாளர்களின் கெமராக்களில் பதிவுசெய்த காட்சிகளை அழிக்கச்செய்து, கொலை மிரட்டலும் விடுத்துள்ளனர். இந்நிலையில், மிக நீண்டநேரத்துக்குப் பின்னர் மாலைவேளை அங்கு சென்ற பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்ற பின்னர் மேற்படி குழுவினர் அன்றைய தினம் இரவு வீடு வந்துசேர்ந்துள்ளனர்.

இவ்விடயம் அறிந்த மாவட்டத்தின் ஏனைய சக ஊடகவியாளர்கள் மயிலத்தமடுவுக்குச் சென்ற குழுவினர் தடுத்துவைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தடுப்பில் ஈடுபட்டவர்கள் மீது உடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியும் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் மட்டக்களப்பின் ஊடக சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை மாநகர நிதி மோசடி சந்தேக நபருக்கு விளக்கமறியல்

பாறுக் ஷிஹான்

கல்முனை மாநகர சபையின் நிதி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் கணக்காளரை எதிர்வரும் செப்டெம்பர் 06ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பான வழக்கு நேற்று (23) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்த நீதிவான் முன்னாள் கணக்காளர் உட்பட 04 சந்தேக நபர்களையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கல்முனை மாநகர சபையின் நிதி மோசடி விவகாரம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு அண்மைக்காலமாக நால்வர் கைதாகியிருந்தனர். இதில் ஒருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். ஏனைய மூன்று சந்தேக நபர்களும் விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் (22) திருகோணமலையில் முன்னாள் கணக்காளர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட கல்முனை மாநகர சபையின் முன்னாள் கணக்காளர் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னர் கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிவான் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், கைதான முன்னாள் கணக்காளர் உள்ளிட்ட கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஏனைய சந்தேக நபர்களின் சேவைக்காலத்தில் வரியிறுப்பாளர்கள் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளின்போது மேலும் மோசடி முறைகேடுகள் எவையும் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பிலும் இவற்றுடன் வேறு எவராவது சம்பந்தப்பட்டிருக்கின்றனரா என்பது குறித்தும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றன.

மேலும் கடந்த காலங்களில் இவ்வரி மோசடி தொடர்பில் விசாரணைகள் பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் பலர் கைதுசெய்யப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன், இவ்விடயம் பற்றி கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் நிமித்தம் நிர்வாக மட்டத்தில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

குறித்த நிதி கையாடல் சம்பவம் தொடர்பில் கடந்த காலங்களில் கல்முனை பொலிஸ் நிலையம், அம்பாறை விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் விசாரணை பொறுப்பளிக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் இவ்வழக்கு விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



காரைதீவு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய புனராவர்த்தன நவகுண்ட மஹா அஷ்டபந்தன கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா நேற்று (23) அதிகாலை 4.00 மணியளவில் ஆரம்பமானது.

படங்கள்:காரைதீவு நிருபர்

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

## மாவடிச்சேனையில் சம்பவம்

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, வெருகல் மாவடிச்சேனை கிராமத்தில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் (22) இரவு உயிரிழந்துள்ளதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெருகல், மாவடிச்சேனை கிராமத்தில் வசிக்கும் அழகுவேல் இராசகுமார் (வயது 30) என்ற இளம் குடும்பஸ்தரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

மேற்படி இளம் குடும்பஸ்தர் நேற்றுமுன்தினம் (22) மாலை பனைமரத்தில் ஏறி பனை ஓலை வெட்டியுள்ளார். அதன்போது பனை ஓலையிலிருந்த குளவிக்கூடு கலைந்து கொட்டியுள்ளது. இதனையடுத்து அவர் சிகிச்சைக்காக கதிரவெளி வைத்தியசாலையில் 3.00 மணியளவில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வாழைச்சேனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சின்னமுத்து நோய்ப் பரவலை தடுத்தல்; மத நிறுவனங்களுடன் கலந்துரையாடல்!



நூருல் ஹுதா உமர்

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனைக்கமைவாக சின்னமுத்து மற்றும் ஜேர்மன் சின்னமுத்து உள்ளிட்ட தொற்று நோய்கள் தொடர்பிலும் அதற்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதன் அவசியம் பற்றியும் கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் கேட்போர் கூடத்தில் விசேட கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் (22) இடம்பெற்றது.

கொழும்பை அண்டிய பகுதிகளில் தடுப்பூசிகளைப் பெறாதவர்களால் இவ்வாறான நோய்ப்பரவல் ஏற்படுவதாக தகவல் கிடைக்கப்பெற்றதையடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு குறித்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

இக்கலந்துரையாடலில் தொற்று நோய்களை கட்டுப்படுத்துவதன் அவசியம் பற்றியும் குழந்தைகளுக்கு தொற்று நோய்கள் ஏற்படுவதால் ஏற்படும் பாரதூரமான விளைவுகள் பற்றியும் அறிவுறுத்தப்பட்டதுடன், தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக மத நிறுவனங்களின் பங்களிப்பைப் பெறுவதற்கான பொறிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு மத நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்று மத நிறுவனங்களின் ஊடாக தொற்று நோய்கள் மற்றும் தடுப்பூசிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி பிராந்தியத்தில் இவ்வாறான சடுதியான நோய்கள் ஏற்படுவதையும் அதனால் ஏற்படும் மரணங்கள் மற்றும் பாரதூரமான இழப்புகளைத் தவிர்ப்பதற்காகவும் இவ்விசேட கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்ததாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தனது பிரதான உரையில் தெரிவித்திருந்தார்

தற்போது சில பகுதிகளில் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதனால் மத நிறுவனங்களின் ஊடாக அது தொடர்பான விழிப்புணர்வை வழங்குவது பற்றி கல்முனை பிராந்திய உள நலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஜே.நௌபல் விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பி.அப்துல் வாஜித், பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், மத குருமார், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# போழியார் புலம்பல்!



***13ஆவது திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜீத்து இரட்டை வேடமாம் எண்டு மனோகணேசன்ட தம்பி பிரபா கணேசன் சொல்லி இருக்காரு எலுவா..? அவர் மெய்யா ....மெய்யா இரட்டை வேடம்தான்... அடே தம்பி பிரபா நீ மட்டும் என்ன ஒத்த வேடமாடாம்பி... ஒண்ட அண்ணன் மனோ கணேசனால அரசியலுக்கு வந்த நீ... இப்போ அண்ணன் என்னடா... தம்பி என்னடா அரசியலில எண்ட பாட்டப்பாடி இரட்ட வேடம் ஆடுறா... இது மலையக மக்களுக்கு நல்லா தெரியும் எலுவா....?***

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இலங்கை உதைபந்து சம்மேளன நிர்வாக சபைத் தேர்தல்

## தலைவர் பதவிக்கு ஜஸ்வர் – தக்ஷித போட்டி

ஏ. அகீல் சிஹாப்

செப்டெம்பர் மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை உதைபந்து சம்மேளன நிர்வாக சபையின் தேர்தலில் தலைவர் பதவிக்கு முன்னாள் தலைவர் யூ.எல்.ஜஸ்வர் உமர், இளம் வர்த்தக பிரமுகர் தக்ஷித சுமதிபாலவும் போட்டியிடுகின்றனர். அவர்கள் இருவர் தலைமையில் தலா 13 பேர் கொண்ட வேட்பு மனுக்கள் தேர்தல் குழுவினரிடம் சனிக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கை உதைபந்து சம்மேளனத்தில் பல்வேறு பதவிகளை வகித்த பலர் ஜஸ்வர் தலைமையில் 13 பேரைக் கொண்ட வேட்பு மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், தக்ஷித தலைமையில் 13 பேரைக்கொண்ட வேட்பு மனுவில் புதுமுகங்கள் பலர் இடம்பெறுகின்றனர்.



## ஆசியக்கிண்ண தொடரிலிருந்து வெளியேறும் சமீர

ஏ. அகீல் சிஹாப்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளரான துஸ்மந்த சமீர உபாதை காரணமாக ஆசியக் கிண்ண தொடருக்கான குழாமில் இருந்து வெளியேறியுள்ளார். இதேவேளை, முன்னணி சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்கவும் உபாதைக்குள்ளாகியுள்ள நிலையில் ஆசியக்கிண்ண தொடரின் ஆட்டங்களில் ஆடும் வாய்ப்பை அவரும் இழப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எல்.பி.எல். தொடரில் தோற்பட்டை உபாதைக்குள்ளான சமீர குறித்த உபாதைக்காக ஓய்வெடுக்க அறிவுறுத்தப்பட்டிருக்கும் நிலையில் அவருக்கு ஆசியக் கிண்ணத் தொடரில் முழுமையாக ஆட முடியாத நிலை உருவாகியுள்ளது.

எனினும், துஷ்மந்த சமீர இந்த ஆண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் நடைபெறவிருக்கும் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் பூரண உடற்தகுதியுடன் இருப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு ஆசியக் கிண்ணத் தொடருக்கான இலங்கை குழாமும் ஓரிரு நாட்களில் அறிவிக்கப்படும். இலங்கை குழாத்தில் 15 வீரர்களும் 05 மேலதிக வீரர்களும் உள்ளடக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஹீத் ஸ்ட்ரீக் காலமான செய்தி போலி

## சக வீரர் தெரிவிப்பு



ஸிம்பாவ்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளருமான ஹீத் ஸ்ட்ரீக் புற்றுநோய் காரணமாக நேற்று காலை தனது 49ஆவது வயதில் காலமானார் என்ற பிரபல ஊடகங்களில் வெளியான நிலையில், குறித்த செய்தி வதந்தி எனத் தெரிய வந்துள்ளது.

ஹீத் ஸ்ட்ரீக் மரணமடையவில்லை என ஸிம்பாவ்வே முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹென்றி ஒலாங்கா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

ஹீத் ஸ்ட்ரீக்கின் மறைவு பற்றிய வதந்திகள் மிகைப்படுத்தப்பட்டவை என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும். நான் அவரிடம்தான் கேட்டேன். மூன்றாவது நடுவர் அவரை திரும்ப அழைத்துள்ளார். அவர் உயிருடன் இருக்கிறார் மக்களே! என பதிவிட்டுள்ளார்.

முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ஹீத் ஸ்ட்ரீக் ஸிம்பாவ்வே அணிக்காக முதன்முதலாக டெஸ்ட் போட்டிகளில் 100 விக்கெட்களை கைப்பற்றியவர் என்ற சாதனைக்குரியவராவார்.






திருகோணமலை மெகெய்ஸர் மைதானத்தில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்து சுற்றுப்போட்டி- 2023 இல் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை வீரர்கள் சிறப்பாக விளையாடி 18 வயதுக்குட்பட்ட வயதுப் பிரிவு சம்பியன் பட்டத்தை பெற்று கிழக்கு மாகாணத்தில் தனக்கான அடையாளத்தை மீண்டும் ஒரு தடவை நிரூபித்து தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
படம்: மாளிகைக்காடு நிருபர்





திருகோணமலை மெகெய்ஸர் மைதானத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு போட்டியின் பெட்மிண்டன் சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான 16 வயதுப் பிரிவில் விளையாடிய கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவர்கள் மூன்றாம் இடத்தினை பெற்று பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக மாகாண மட்ட பெரு விளையாட்டுகளில் வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகி வரலாற்று வெற்றியினை பதிவு செய்தனர்.
படம்: எம்.என்.எம்.அப்ராஸ்

# மாணவர்களுக்கு விசேட கரப்பந்தாட்ட பயிற்சிநெறி



குருக்கள்மடம் நிருபர்

மட்டக்களப்பு குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலய தரம் 6-10 வரையான மாணவர்களுக்கு விசேட கரப்பந்தாட்ட பயிற்சிநெறி அண்மையில் இடம்பெற்றது.

குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டு கழகத்தின் கரப்பந்தாட்ட தலைமைப் பயிற்றுவிப்பாளர் எஸ். தயானந்தன் தலைமையில், அவருடன் இணைந்து ஏனைய கழக பயிற்றுவிப்பாளர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலய அதிபர் சிறிதரன் மற்றும் ஆரம்பிப்பாளராக அருளானந்தம் மற்றும் ஏசியன் விளையாட்டு கழகத்தின் மூத்த உறுப்பினர்கள், வீரர்கள் எனப்பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது அணி ரீதியாக சுற்றுப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டு இதில் திறமையான நட்சத்திர ஆட்ட நாயகர்களாக டெசாட்சரன், டீனுகோபன், தஸ்வின், கோலக்ஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதன்போது வெற்றியீட்டிய அணி மற்றும் இரண்டாம் இடம்பெற்ற அணி என்பவற்றுக்கு வெற்றிக்கேடயங்களும் வழங்கப்பட்டன.

# ஆப்கானை இலகுவாக வீழ்த்திய பாகிஸ்தான்

ஆப்கானிஸ்தான் அணியுடனான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் பாகிஸ்தான் அணி 142 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியீட்டியது.

ஆசியக்கிண்ண தொடருக்கு முன்பாக பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையே 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. இந்த தொடர் இரண்டு அணிகளுக்கும் பொதுவான ஆடுகளமாக இலங்கையில் நடைபெறுகிறது.

இந்நிலையில், நேற்று முதல் ஒருநாள் போட்டி ஹம்பாந்தோட்டையில் நடைபெற்றது. முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி இமாம் உல் ஹக்கின் 61 ரன்கள் உதவியுடன் 201 ரன்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. 202 ரன்களை இலக்காக கொண்டு களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி வெறும் 59 ரன்களுக்கு சுருண்டது. பாகிஸ்தான் சார்பில் ஹரிஸ் ரவுப் 05 விக்கெட் வீழ்த்தி ஆட்ட நாயகன் விருது வென்றார். இரண்டாவது போட்டி இன்று இதே மைதானத்தில் நடைபெறுகிறது.

# மத்திய மாகாண உதைபந்தாட்ட சம்பியனான கண்டி களுகமுவ மத்திய கல்லூரி



கண்டி நிருபர்

இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 18 வயதுக்குட்பட்ட போட்டிப்பிரிவில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த கெலிஓய - களுகமுவ மத்திய கல்லூரி அணி மத்திய மாகாண சம்பியனானது.

மேற்படி போட்டித்தொடரின் இறுதிப் போட்டி அண்மையில் கம்பளை ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றதுடன் இறுதிப்போட்டியில் கொட்டகலை தமிழ் வித்தியாலய அணியுடன் விளையாடி 5:4 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. அதேநேரம் இதே பாடசாலையைச் சேர்ந்த 16 வயதுக்குட்பட்ட அணி கண்டி திருத்துவக் கல்லூரியுடன் இறுதிப் போட்டியில் விளையாடி அதிலும் சம்பியனானது.

எனவே இவ்விரு அணிகளும் அகில இலங்கை ரீதியில் போட்டியிடவுள்ளன.

## விளையாட்டுத் துளிகள்

19 வயதுக்குட்பட்ட மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியினர் நேற்று முன்தினம் (22) கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். இலங்கை 19 வயதுக்குட்பட்ட அணியினருடன் 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் 02 போட்டிகள் கொண்ட 04 நாட்கள் கிரிக்கெட் தொடரிலும் விளையாடவுள்ளனர். முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

★★★★★★

பிரான்ஸ் 21 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளராக உலகக்கிண்ண சம்பியன் அணி வீர தியரி ஹென்றி நியமிக்கப்பட்டார். 2023 - 2025 வரை இரண்டு ஆண்டுகளுக்கு, பயிற்சியாளராக தியரி ஹென்றி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★★★★★★

சவூதி அரேபியாவின் அல்-ஹிலால் அணியுடனான ஒப்பந்தம் முடிவான நிலையில், பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இருந்து பிரேஸில் நட்சத்திர வீரர் நெய்மரை அழைத்துவர சொந்த விமானத்தையே அனுப்பி வைத்திருந்தார் சவூதி அரேபிய இளவரசர். நெய்மரை அழைத்து வந்த விமானம் இளவரசர் அல் வலீத் பின் தலால் என்பவருக்கு சொந்தமானது எனவும் அதன் மதிப்பு 500 மில்லியன் டொலர் எனவும் நெய்மரை அழைத்துவர இளவரசர் தமது விமானத்தை அனுப்பி வைத்துள்ளதும் வெளிச்சத்துக்கு வந்தது.

# முப்படை ஓய்வூதியர்களின் கிரிக்கெட் போட்டி

இரத்தினபுரி நிருபர்

எஹலியகொடை பரகடுவ முப்படையினரின் ஓய்வுபெற்ற சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏழு பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை (19) சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தலைமையில் பரகடுவ நாரத கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மேற்படி போட்டியில் கல்வி மற்றும் விளையாட்டில் திறமைகளை வெளிப்படுத்திய பரகடுவ பிரதேச மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் எஹலியகொட உள்ளூராட்சி சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஹரிஸ் கிரியெல்ல உட்பட ஓய்வுபெற்ற முப்படையினரும் கலந்துகொண்டிருந்தனர்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7